செப்பனிடுவதற்காக எடுத்துக்
கொள்ளப்பட்ட
September மாதம் வருடம் 82
செப்பனிட்டு முடித்த
September மாதம் வருடம் 82
ஆராய்ச்சி உதவியாளரின்
கையொப்பம்.

இரங்கசாமிமுதலியார் அண்டு சன்ஸ்

சென்னை:

பூமகள்விலாச அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

இதன் விலை] 1930. [அணா-6.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

புகழேந்திப்புலவர் இயற்றிய

பெரிய எழுத்து

பொன்னுருவிமசக்கை

சென்னை:
பூமகள்விலாச அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

விலை] 1930. [அணா-6.

கெ-24, தாண்டவராயப்பிள்ளை வீதி.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

பொன்னுருவிமசக்கை.

விநாயகர் தோத்திரம்.

காப்பு.

சீதரன்மருமகனே செந்தாமரைமுகனே
பாதச்சிலம்பொலிக்க பலமணிகள்தான்கலிக்க
பொன்னுருமாலையனே புகல்கல்விச்சாலையனே
வன்னமருக்கோனே வளர்கொம்பொருக்கோனே
காரானைமாமுகனே கண்ணன்மருமகனே
சீரானகல்வியனே செப்பும்போர்வெல்லியனே
நனிவாழைத்தீங்கனியே நவில்பலாமாங்கனியே
தனிமாலைபூண்மணியே தளசேகர்க்கோரணியே
தேவருக்குந்தேவனே தேசத்தோர்சீவனே
யாவருக்கும்பெரியவனே யமரர்க்குரியவனே
அத்திமுகனாரே அரனார்மகனாரே
சத்திமகிழ்புத்ல்வா சாற்றும்வானோர்முதல்வா
பொன்னுருவிதன்கதையைப் போற்றிமிகப்படிக்க
வின்னங்கள்வாராமல் விநாயகரேமுன்னிருந்து
மைந்தனார்க்கதையை மகிழ்ச்சியாயான்பாட
எந்தனுடவினைகள் எல்லாம்பறந்தோட
புவிதனிலிக்கதைகள் பூர்த்தியாய்த்தான்பரவக்
கவிமுன்னேவந்துதவும் கற்பகப்பிள்ளையாரே
பாட்டினிசைதெரியேன் பாவினங்கள்சொல்லறியேன்
ஏட்டிலெழுதறியேன் எழுத்தாணிக்கூரறியேன்
உனக்குஅடிமையானேன் உம்பர்பிரானாரே
எனக்குமொருமுகமாய் இலங்கும்பெரியோனே
சொர்க்கம்போவார்க்குத் துணையாயுதவிசெய்வீர்
வர்க்கம்பலகாரம் வாங்கும்பெரியோனே
அப்பமெழுநூறும் அதிரசங்கள்தொண்ணூறும்
செப்பரியவெள்ளருண்டை சேரநூறாயிரமாம்
உடைக்கநல்லதேங்காய்க ளொன்பதுநூறாயிரமாம்
படைக்கநல்லபச்சரிசி பதினாயிரக்கலமாம்
கூடவேபாக்கும் குடத்தோடேசர்க்கரையும்

தேனேடே செந்திணைமா தேவா அமுதமுடன்
செங்கரும்புரஸ்தாளி சீனிப்பலாப்பழமும்
தங்கும்வாழைக்கனியும் தளர்வில்லாமாங்கனியும்
தேங்காய்கொழுக்கட்டை திரளானபாணக்கமும்
மாங்காய்விளாங்கனியும் மாதுளை நற்கனியும்
ஓங்காரமாகவே ஒளிவானஓங்காரங்கு
திங்கள்...சாம்பிராணி தீபதூபமுந்தந்தேன்
வந்தருள வேண்டுமையா மாயன்மருமகனே
சிந்தைமகிழ்ந்து சிறியேன்முன் நில்லுமையா

சுப்பிரமணியர் தோத்திரம்.

கந்தாகடம்ப கதிர்வேலாகார்த்திகையின்
மைந்தாவென்முன்னின்று வரமீய்ந்துகாப்பாயே
வள்ளிமணவாளா வந்தெனக்குமுன்னடவாய்
...ளமன துருமல் கடையேன்முன் நில்லுமையா
போரூருறைசீலா புனிதவடிவேலா
ஆறுமுகமர்ந்தவனே அடியேனைக்காருமையா
பத்தியுடன்தொழுதேன் பரிந்தெனக்குமுன்னடவாய்
புத்திதனை நீகொடுத்தால் புகழ்ச்சியுடன்யான்படிப்பேன்
எம்பிரான்முன்னடக்க என்கதையும்பின்னடக்க
தம்பிரானுனைசிவ சண்முகனே முன்னடவாய்

சரஸ்வதிதோத்திரம்.

தாவிற்சரஸ்வதியே நான்முகன்தேவியே
பூவிலமர்ந்தவளே புல்லறிவேன்முன்னடவாய்
கலைமகளேபொன் னுருவி கதைதன்னையான்படிக்க
நிலையுடனெந்தன் நாவில் நின்றுவிற்பொருந்துமம்மாள்
தாமரையில்வாழ்பவளே நமியேன்முன் நில்லுமம்மாள்
நாமகளேபூமகளே நாயேன்முன் நில்லுமம்மாள்
சரணமென்றடிபணிந்தேன் தற்காக்கவேண்டுமம்மாள்
தருணமிதுசமயம் தயைபுரியவேண்டுமம்மாள்
கற்றமட்டும்பாடுகிறேன் காரிழையாடன்கதையை
குற்றமிருந்தாலுங் கொண்டணைக்கவேண்டுமம்மாள்

கதையின் வரலாறு.

பேடைமயில்கண்ணாள் பெருந்திருவாள்நாயகமே
ஏழாம்நிலையும் எழுநிலையின்மேலேறி

மேலாங்கதவை விடுந்தலைத்தாள்திறந்து
அரண்மனைசால[illegible]ந்த ஆர்க்கவேதாள்திறந்து
பலகேணிவாசல் திறந்தத்தலைபக்கிளியும்
நூலால்கடுத்திரளார் நூற்றொருவர்தான்பிறந்தார்
(அவர்)அம்பலங்கடோறும் அடங்கலும்மலடானார்
ஆண்மலடுபெண்மலடு அருகிருந்தார்தான்மலடு
ஆனைமலடு அருஞ்சிங்கந்தான்மலடு
ஒட்டைமலடு ஒதுங்கிருந்தார்தான்மலடு
குதிரைமலடு குடியிருந்தார்தான்மலடு
பசுவுமலடுவாசல் பணிசெய்வார்தான்மலடு
ஆடுமலடு அடங்கலுந்தான்மலடு
தெருவிலிருக்கிற தென்னமரந்தான்மலடு
வாசலிலிருக்கிற வாழைமரந்தான்மலடு
புறக்கடையிலிருக்கிற புன்னைமரந்தான்மலடு
பிச்சைக்குவருகிற பிராமணருந்தான்மலடு
ஆற்றில்கரைத்த புளியானேன்பாவிநான்
அங்காடிக்கிட்ட பதரானேன் [illegible]விநான்
குன்றின்மேல்பெய்ந்த மழைய னேன்பாவிநான்
குடத்திலேவைத்த விளக்கானேன்பாவிஎன்று
வையைநகராளும் மகாராசன்தேவியரும்
மாநகரமாளும் மகாராசன்தேவியரும்
தேசத்தையாளுந் அ[illegible]போதனன்தேவியரும்
அவளுக்கு-மைந்தரில்லையென்று மாதுமனஞ்சலித்து
மாதுமனஞ்சலித்து மண்டபத்திற்பள்ளிகொண்டாள்
வேஷ்டிவிரித்து வெகுநிலத்திற்பள்ளிகொண்டாள்
ஆடைவிரித்து அழுதுமேபள்ளிகொண்டாள்
மூத்தாணிதான்விரித்து முருகுழலாள்பள்ளிகொண்டாள்
மகாமுனியாழ்வாரும் வண்ணக்குழைபிள்ளையாரை
பிராமணராய்வந்து பெருந்திருவாள்கைகொடுத்தார்
பேடைமயிற்கண்ணாள் பெருந்திருவாள்தான்வாங்கி
மாதுமனமகிழ்ந்து மண்டபத்திற்கண்விழித்து
பொழுதுவிடியட்டும் பொன்னுருவிக்கேகொடுப்போம்
நானுங்கனவுகண்டேன் நற்கன்னிக்கேகொடுப்போம்
இப்படியாக யிருக்கின்றவேளையிலே
கங்குல்விடிந்தது கதிரோனும்வந்துதித்தான்
செங்கண்மால்கோவிலுக்குத் திருக்காப்புச்சென்றது

தாதிகள் சமையல்செய்தது.

அங்கொருதாதி அறிவுடையாள்தானெழுந்து
காஞ்சிநாடாளும் கருணர்வருவாரென்று
ஆக்குமடப்பள்ளியை அலகிட்டுத்தாள்திறந்து
கோலமடப்பள்ளியைக் குச்சிட்டுத்தாள்திறந்து
அடுப்புமெழுகியே அட்சதைக்காப்புமிட்டு
பானைகழுவி பனிநீருலைவார்த்து
வடகடலில்செம்பொனென்ன வாரியனல்மூட்டி
தென்கடலில்முத்தென்னத் திரட்டிஉமியிறைத்து
ஆச்சாவுந்தேக்கும் அகிலும்பிளந்தடுக்கி
மாணிக்கக்கட்டி நெரித்துநெருப்பாக்கி
குழலெடுத்தூதினர் கொம்பனைமார்தாதியரும்
பூமியிலுள்ள புதுக்கறிகளத்தனையும்
காவடியில்கொண்டுவந்து போட்டார்கள்மன்னவர்கள்
அம்மியெடுத்தார் அரிவாள்மணையெடுத்தார்
காயந்தமிளகாய் கறிமிளகாய்சீரகமாம்
அரைத்துவழித்தெடுத்தார் அன்பன்னதளிகைக்கு
சேர்த்துவழித்தெடுத்தார் செம்பொன்தளிகைக்கு
வாழைக்காய்கொய்வார் வழுதலங்காய்காம்பறிவார்
ஈழப்பலாக்காயை இளமுள்ளுபோக்கிடுவார்
சேதிபிறக்க சிறப்பாகச்செய்திடுவார்
அன்பான அவரைக்காய் ஆய்வார்கள்கொம்பனைமார்
மாதுளங்காய்பூசினிக்காய் வண்மையாய்வருத்திடுவார்
கர்ப்பூரம்போலவே கருணைசிறுகிழங்கு
அற்புதம்போலே புளியிட்டுத்தான்சமைத்து
பொற்பதமதாகப் போதச்சமைத்துவைத்தார்
ஆயிரத்தெட்டு அருங்கறியும்போசனமும்
ஐஞ்ஞூற்றியெட்டு பொரிக்கறியும்போசனமும்
தாளிதமும்பச்சடியும் தனனில்வகைக்கறியும்
அடிசில்சமைத்து அரைநாழிக்குள்ளாக
வெள்ளிக்கிடாரத்தில் வெந்நீருபாரித்தார்
பொன்னுக்கிடாரத்தில் போதநீர்பாரித்தார்
தங்கக்கிடாரத்தில் தாகநீர்பாரித்தார்
சாலோடேபாரித்து வைத்தார்தடங்கண்ணார்
கனகமணிகட்டில்விட்டு கருணரெழுந்திருந்து
ஆடைகளைந்து ஆபரணந்தான்கழற்றி

ஆடையுங்கச்சும் அவிழ்த்தந்த ஆணழகன்
ஆபரணப்பெட்டி அப்போதுதான் திறந்து
ஆபரணமெல்லாம் அடங்கலுங்கழற்றிவைத்து
தங்கமிதியடிமேல் ஏறித்தனஞ்செயரும்
முத்துமிதியடியைத் தொட்டுமிகநடந்தார்
மூத்தாள்கடகக்கை முன்னோக்கிதானடந்தார்
மஞ்சனீர்சாலையிலே மன்னரும்போய்புகுந்தார்
அங்கேயொருதாதி அறிவுடையாளோடிவந்து
கெண்டியில்தீர்த்தமது கொடுத்தாள்கிளிமொழியாள்
மாலைமுடியானும் மஞ்சன்நீராடினார்
ஈரத்துயில்களைந்து இழைசேர்ந்தபட்டுடுத்தி
நனைந்ததுயில்களைந்து நாகரீகப்பட்டுடுத்தி
சிவசிவாவென்று திருநீற்றுக்காப்பணிந்து
அரகராவென்று அணிந்தாரேவெண்ணீறு
பத்திரஞ்சாத்தி பகவானைப்பூசைசெய்து
தும்பைமலரெடுத்து சூரியனைப்பூசைசெய்து
இந்திரனைநோக்கி இருகையால்தான்றொழுதான்
ஐயனைமெய்யனை ஆயிரங்கண்ணிந்திரனை
பொய்சொல்வார்க்கெல்லாம் புறங்காக்கும்புண்ணியனை
மெய்சொல்வார்க்கெல்லாம்விளக்கொளியாய்நின்றவனை
முப்பத்துமுக்கோடி முனிவரையும்பூசைசெய்து
நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகளையுங்கைதொழுது
ஆடையுங்கச்சும் அணிந்தந்த ஆணழகன்
சீருலவுங்கச்சும் எடுத்தந்ததேர்வீரன்
முத்துமிதியடியைத் தொட்டுமிகநடந்து
அரண்மனையேழுகட்டும் அந்தப்புறந்தாண்டி
அமுதுண்ணும்மண்டபத்தே ஆணழகன்வந்திருந்தான
கருணர் போசனமுண்ணத்து.
அங்குமொருதாதி அறிவுடையாளோடிவந்து
வட்டமணைபோட்டு வாழைக்குருத்துமிட்டாள்
இட்டமணைமேலே எழில்விசையர்வீற்றிருந்தார்
புலிமுகக்கால்நிறுத்தி பொன்னுத்தளிகையிட்டார்
சிங்கமுகக்கால்நிறுத்தி செம்பொன்றளிகையிட்டார்
மற்றுமொருதாதி மாதவளோடிவந்து
தாளிதமும்பச்சடியும் தன்னில்வகைக்கறியும்
பொரித்தபொரிக்கறியும் பொன்போல்சிறுபருப்பும்

கூட்டுக்கறியும் குழம்பில்வகைக்கறியும்
ஆயிரத்தெட்டு அருங்கறியும்போசனமும்
சுற்றிலுங்கறியைவைத்து புத்துருக்குநெய்வார்த்தான்
காராவின்நெய்யதனைக் கைரொம்பத்தான்சொரிந்தாள்
அந்த அடிசல் அமுதுண்டபிற்பாடு
அத்தளிகைமாற்றியே பொற்றளிகைமுன்னேவைத்தாள்
காச்சியபாலும் கற்கண்டுமுப்பழமும்
வாழைப்பழமும் மதுரையின்மாம்பழமும்
வேரின்புறத்தில் வெடித்தபலாப்பழமும்
கொம்புசிறுதேனுங் கோதுபடாமுக்கனியும்
மலையில்சிறுதேனும் மலையாளச்சர்க்கரையும்
இஞ்சியெலுமிச்சை இயலானநார்த்தங்காய்
கொச்சிகளாக்காய் கொடிதானதமர்த்தங்காய்
எடுத்தயிருமாய் எடுத்துவிட்டாளேந்திழையும்
அந்த அடிசில் அமுதுண்டபிற்பாடு

கருணர் பொன்னுருவியைச்சேர்ந்தது.

பொன்னுருவிநாயகியைப் போய்ப்புணரவிப்பொழுது
எழைநாழிகை அசாடிக்கவேணுமென
மாயன்பெருமானை மனதிலேதானினைக்க
கர்னன்படுந்துயரம் கடல்வண்ணர்தானறிந்து
அவர்சொல்லைக்கேட்டு அசாடித்தார்மாயவரும்
காஞ்சிவளநாடாளும் கருணர்பெருமாளும்
கன்னி[illegible]வகுழலை கையாலெடுத்தணைந்து
மதிமுகச்சுந்தரத்தை மன்னனெடுத்தணைந்து
வாசனைசந்தனத்தை மனைவியருகுமேனியெல்லாம்
[illegible]புநிறைந்திடவே மங்கையற்குமேனியெங்கும்
போதவேதான்பூசி பொங்கிமனங்குளிர்ந்து
மங்கைநல்லாள்முடியில் மல்லிகைப்பூமாலைசூடி
கமலத்திருமுகத்திற் கஸ்தூரிப்பொட்டுமிட்டு
கமலத்திருமுகத்தில் கண்ணுக்குமைதீட்டி
மடித்துச்சுருள்கொடுக்க இல்லையேமங்கையரே
மாத்தோடே[illegible]ந்தொரு மங்கையருமானுமே
வாய்பேசா அன்னம்போல் வாய்த்தாயேசித்திரமே
வண்டுமுகந்தாப்போல் வஞ்சியேநான்முகந்தேன்
புட்பமுகந்தாப்போல் பொற்கொடியேநான்முகந்தேன்

என்றுசொல்லிகருணாவர் ஏங்கிமனந்தளர்ந்து
ஆரைவெறுத்திடலாம் ஐவரைநொந்திடலாம்
எவரைவெறுத்திடலாம் இனியாரைநொந்திடலாம்
தன்விதியைத்தான்வெறுத்து தனஞ்சயனாப்போது
கட்டில்விட்டுக்கீழிறங்கிக் காவலனும்போய்நடந்தான்
மஞ்சனீர்சாலையிலே வந்தாரேமன்னவரும்
காலோடுகையும் கனிவாயும்சுத்திசெய்து
மார்போடுகையும் மதிமுகமுஞ்சுத்திசெய்து
பாகைவிரித்துடுத்திப் பட்டாடைமேலணிந்து
சிவசிவாவென்று திருநீற்றுக்காப்பணிந்து
அரகராவென்று அணிந்தாரேவெண்ணீறு
இந்திரனைநோக்கி எழில்வீரன்தெண்டனிட்டாள்
ஆடையுங்கச்சும் அணிந்தந்த ஆணழகன்
சீருலவுங்கச்சும் எடுத்தணிந்தான்தேர்வீரன்
இப்படியாக இவரிருக்கும்வேளையிலே

பெருந்திருவாள் குமாரனாகிய கருணாவை ஆசீர்வதித்தது

பேடைமயில்கண்ணாள் பெருந்திருவாளோடிவந்து
காஞ்சிநாடாளும் கருணாவெதிரேவந்தாள்
காஞ்சிநாடாளும் கருணாவர்பார்த்து
பூவும்புதுமலரும் பொன்னறுகுஅட்சதையும்
தாயார்தன்பாதத்தில் தார்வேந்தன்தான்சொரிந்தான்
மாதாவின்பாதத்தில் மலர்தூவிதெண்டனிட்டான்
ஆச்சியின்பாதம் அடிவணங்கித்தெண்டனிட்டான்
தெண்டனிட்டமன்னவனைச் சீர்பெறவேதானெடுத்து
வாழ்வீர்வளர்ந்திருப்பீர் வையகத்திலுய்ந்திருப்பீர்
நிற்பீர் நிலைத்திருப்பீர் நீடூழிவாழ்ந்திருப்பீர்
போருக்குச்சென்று பொழுதுடனேவென்றிடுவீர்
வென்றகளரியிலே வீரபட்டம்பெற்றிடுவீர்
மாதாமனமகிழ மைந்தர்களைப்பெற்றிடுவீர்
பெற்றோர்மனமகிழப் பிள்ளைகளையீன்றிடுவீர்
வாழ்வீர்காணென்று மனங்குளிரவாழ்த்தினாள்
இருமிருமென்றுசொல்லி இருந்தாரிருவருமாய்
பேடைமயில்கண்ணாள் பெருந்திருவாளப்போது
காஞ்சிநாடாளும் கருணர்பெருமானே
பொன்னுருவிமாளிகைக்குப் போனீரோபுண்ணியரே

காயோபழமோதான் காஞ்சிநாடாண்டவரே [ன்
போனதொருகாரியத்தை புண்ணியரேசொல்லுமென்று
காஞ்சிநாடாளுங் கருணைரவர்கேட்டு [து
(ஆச்சி) அழிந்தபழங்காணும் அதோவாராள்பாருமென்
சித்திரத்தூணருகே செல்வனவன்மறைந்திருந்தான்
மாணிக்கத்தூணருகே மன்னன்மறைந்திருந்தான்
இப்படியாக இவரிருக்கும்வேளையிலே

பொன்னுருவி தன்னை அவமானப்படுத்தினவாறென்று
தாதிகளை வினவினது.

ஏழரைநாழிகையும் சென்றதிளங்கொடிக்கு
கட்டிச்சுருட்டியவள் கட்டில்விட்டுக்கீழ்குதித்து
வாரிச்சுருட்டியந்த மாதவள்தானெழுந்து
தாமக்கருங்குழலாள் தாதியெதிரில்வந்து [டு
(தாதி) உடையாரந்தான்குலைந்து ஒட்டியாணம்பூட்டுவிட்
(என்) கமலத்திருமுகத்தில் கஸ்தூரிப்பொட்டுமிட்டு
மங்கையின்பூமுடியில் மல்லிகைப்பூமாலைசூட்டி [ன
(என்) வாய்திறந்துதாம்பூலம் வைத்தவரைச்சொல்லுமெ

தாதிகள் பொன்னுருவிக்கு மனந்தேறுதல் சொன்னது.

தாய்போல்வளர்த்தெடுத்த தாதியருந்தான்கேட்டு
கண்டும்பொறுக்காத கணவனணைந்தாரோ
பார்த்தும்பொறுக்காத பத்தாவணைந்தாரோ
வெளியிலுஞ்சொல்லலாமோ வேல்பொருதுங்கண்ணே
மனதிலிராதோதான் மங்கையிளங்கொடியே [தீ
போதவருந்தடங்கண் பொன்னுருவிதான்கேட்டு
கோபித்துக்கண்சிவந்தாள் கொல்லும்புலியதுபோல்
பற்றியநாகம் பவளம்போல்கண்சிவந்து [தி
(அவள்) ஆடையொருகைபிடித்துக் கூந்தலொருகைபிடித்

பொன்னுருவி மாமியாரிடத்தில் வந்துவினவினது.

மாமியார்மாளிகைக்கு வாராள்மயில்போல
பேடைமயில்கண்ணாள் பெருந்திருவாள்தான்பார்த்து
மாமியுங்கண்டுமங்கே வாவென்றுதானழைத்தாள்
இங்கேயிருமென்று இடஞ்சுட்டித்தட்டலுற்றாள்
[illegible]டத்தே தார்குழலாள்வீற்றிருந்தாள்
பேடைமயில்கண்ணாள் பெருந்திருவாள்தான்பார்த்து

வந்ததொருகாரியத்தை வாய்திறந்துசொல்லுமென்றாள்
(மாமி) உன்னாடைதான்குலைந்துஒட்டியாணம்பூட்டுவிட்
கமலத்திருமுகத்தில் கஸ்தூரிப்பொட்டுமிட்டு [டு
மாணிக்கப்பொட்டுமிட்டு வார்குழற்குப்பூமுடித்து
வாய்திறந்துதாம்பூலம் வைத்தவரைசொல்லுமென்றாள்

பெருந்திருவாள் மருமகளாகிய பொன்னுருவிக்கு
மனந்தேறுதல் சொன்னது.

பேடைமயில்கண்ணாள் பெருந்திருவாள்தான்கேட்டு
கண்டயம்பொறுக்காத கணவனைநினைந்தாரோ
பார்த்தும்பொறுக்காத பத்தாவைநினைந்தாரோ
காஞ்சிநாடாளும் கருணாரவர்வருவார்
கல்வியிற்சிறந்ததொரு கருணாரவர்வருவார்
பின்னொருவர்வருவாரோ பொற்கொடியேயுன்னண்டை
மற்றொருவர்வருவாரோ மயிலனையேயுன்னண்டை
வெளியிலுஞ்சொல்வாரோ வேல்பொருதுங்கண்ணாளே
மனதிலிராதோதான் மங்கையிளங்கொடியே
பொன்னுருவிநாயகியும் பொற்கொடியுந்தான்கேட்டு
கோபம்பெரிதாகிக் கொம்பனையுந்தான்சீறி
இழிகுலத்தானவனும் எந்தனைத்தீண்டலாமோ
தேர்ப்பாகனென்றுசொல்லித்தீண்டாமல்நானிருந்தேன்
திருமதுரைக்குள்ளே திருவாழும்வாயிலுள்ளே
கட்டிவரும்பாற்குடங்கள் காவலனார்வாசலிலே
விடுவேனோநானவரை வேல்பொருதுங்கண்ணாளும்
ஆடையொருகைபிடித்துக் கூந்தலொருகைபிடித்து
மாமனுக்குஞ்சொல்வேனென்றாள் மாலைக்கருங்குழலும்
பேடைமயில்கண்ணாள் பெருந்திருவாள்தான்கேட்டு
அந்தப்புரத்திற்கு அத்தனைபெண்டுகளும்
மாமனுக்குஞ்சொல்வாரோ மாலைக்கருங்குழலே
ஆணாய்ப்பிறந்தவர்கள் அறிந்தாரேயாமாகில்
வெட்கமுமில்லையோ வேல்பொருதுங்கண்ணாளே
போதேவருந்தடங்கண் பொன்னுருவிநாயகமும்
வீசிநடந்தாளே வீரனுடபொன்னுருவி
மாதுநல்லாள்பொன்னுருவி மண்டபஞ்சென்றேறினாள்

பொன்னுருவி கெர்ப்பந்தரித்து மசக்கையானது.

மங்கைநல்லாள்பொன்னுருவி மசக்கைபெரிதாகி
அன்னநடையாள் அழுதவிடம்பள்ளங்கொள்வாள்

மாறுநல்லபொன்னுருவி மசக்கைகுணமாகி
உப்புரைப்பும்வேண்டாம் உரியின்தயிர்வேண்டாம்
காளாஞ்சிவேண்டாம் கடையாத்தயிர்வேண்டாம்
புந்திவிரும்பியது பூசினிக்காய்தன்பேரில்
ஐயர்குளத்து அரிசிவந்தால்சோறிறங்கும்
இய்யர்குளத்து சொராவந்தால்சோறிரங்கும்
[illegible]காவீற்பிரசாதம் கொண்டுவந்தாற்சோறிறங்கும்
பாண்டிவளநாட்டார் பசலைவந்தால்சோறிறங்கும்
கட்டிலின்மேலே உறங்காளேகட்டழகி
மெத்தையின்மேலே உறங்காளேமெல்லியரும்
மெத்தையும்கட்டிலும் வெறுத்ததுமெல்லியற்கு
முந்தாணிபோட்டு மொய்குழலும்பள்ளிகொண்டாள்
ஊற்றுத்தண்ணீர்சுரக்கும் உத்தமிக்குஎப்போதும்
அத்தனையுந்தான்சகித்து ஆனந்தவாழ்மாரி
இப்படியாக இவளிருக்கும்வேளையிலே

பெருந்திருவாள் தாதியை அழைத்து துற்சடையை
வரவழைக்கச்சொன்னது.

பேடைமயில்கண்ணாள் பெருந்திருவாள்தானறிந்து
தாமக்கருங்குழலாள் தாதியைத்தானழைத்து
தோகைமயிலனையாள் துற்சடைப்பூநாயகத்தை
அரைநாழிகைக்குள் ளழைத்துவாதாதியென்றாள்
தாமக்குழலாளுந் தாதியதுகேட்டு
சொன்னசொல்தவறாமல் சுருக்காகத்தானெழுந்து
போறாளவள்தாதி பொன்னுபாணமின்ன
பொற்பிரப்பங்கோல்பிடித்துப் போறாளவள்தாதி
தோகைமயிலனையாள் துற்சடையாள்மாளிசென்றாள்
தோகைமயிலனையும் துற்சடையாள்மாளிகையில்
(அவள்) ஆட்டமுங்கூத்தும் ஆரணங்குபார்த்திருந்தாள்
தாமக்குழலாளும் தாதியவளுட்புகுந்து
செம்பொன்திரை நீக்கிச் சேரவந்துதெண்டனிட்டாள்
அம்பொன்திரை நீக்கி அழகாகத்தெண்டனிட்டாள்
தெண்டனிட்ட தாதி திரும்பியெழுந்திருந்து
மோதிரமின்ன முடிமேலேகைதொழுதாள்
தோகைமயிலனையாள் துற்சடையாள்தான்பார்த்து
ஆர்பெண்ணேதாதி அறியவுரையுமென்றாள்

ஆர்பணியுமல்ல அடியேன்றிருப்பணிதான்
மாநகராமாளும் மகாராசன்தேவியவள்
பேடைமயில்கண்ணாள் பெருந்திருவாள்தாதியென்றாள்
(நீ)இங்குதான்வந்ததை எனக்கறியக்கூறுமென்றாள்
பேடைமயில்கண்ணாள் பெருந்திருவாளுந்தனையும்
அரைநாழிகைக்குள் ளழைத்துவரவேணுமென்றாள்

துற்சடையாள் பெருந்திருவாளது அரண்மனைவந்தது.

தோகைமயிலனையாள் துற்சடையாள்தான்கேட்டு
ஆகட்டுமென்றுசொல்லி அப்படிக்கேநல்லதென்று
(அவள்)ஆட்டமுங்[illegible]ம் அமருமென்றுகையமர்த்தி
கூடவேசோதிமின்னை கொம்பேரிடையாளும்
வீதியும்வீதி தெருவும்பலகடந்து
மாநகராமாளும் மகாராசன்மாளிசென்றாள்
பேடைமயில்கண்ணாள் பெருந்திருவாள்முன்னேவந்து
என்னையழைத்தவகை என்மதனிசொல்லுமென்றாள்
உன்னையழைத்தது ஒன்றுற்குறைவுமில்லை
ஆளப்பிறந்தானே அ[illegible]யன்றேவியற்கு
மாநகராமாளும் மகாராசன்றேவியற்கு
காஞ்சிநாடாளும் கருணருடதேவியற்கு
போதேவருந்தடங்கண் பொன்னுருவிதாயகமும்
சோறென்றுங்கேளாளேசொல்லொன்றுஞ்சொல்லாளே
கட்டிலின்மேலே படுக்காளேகாரிழையாள்
மெத்தையின்மேலே படுக்காளேமெல்லியரும்
கச்சாயம்வேண்டாளே காளையுடபத்தினியும்
உப்பிட்ட பண்டங்கள் வேண்டாளேஉத்தமியாள்
வதுமிறக்கமில்லை இளங்கொடியாள்நாயகிக்கு
வதுமிறக்கமில்லை எப்படிக்கோபெண்பிள்ளை
(நீ)ஆராய்ந்துபார்த்து அறிக்கையிடவேணுமென்றாள்

துற்சடையாள் தாதியையழைத்து பொன்னுருவியை
வரச்சொன்னது.

தோகைமயிலனையாள் துற்சடையாள்தான்பார்த்து
தாமக்குழலாளைத் தாதியரைத்தாமழைத்து
காஞ்சிநாடாளுங் கருணருடதேவியரை
மாநகராமாளும் மகாராசன்தேவியரை

தானழைத்தேனென்று சொல்லி நீயழைத்துவாருமென்
தாமக்குழலாளுந் தாதியருந்தான்கேட்டு [றாள்
அருளருளுமென்னாச்சி அப்படிக்கேயாகுதென்று
போறாளவள் தாதி பொன்னாபரணமின்ன
பொற்பிரப்பங்கோல்பிடித்துப் போறாளவள் தாதி
போதேவருந்தடங்கண் பொன்னுருவிமாளிசென்று
தென்னாடிபள்ளிகொள்ளும் சித்திரக்கூடம்வந்து
வளநாடிபள்ளிகொள்ளும் மாணிக்கக்கூடம்வந்து
செம்பொன்திரை நீக்கிச் சேரவந்துதெண்டனிட்டாள்
அம்பொன்திரை நீக்கி அழகாகத்தெண்டனிட்டாள்
தெண்டனிட்டாள் தாதி இரு[illegible]ழுந்திருந்து
மோதிரமின்ன மூடிமேலேகைதொழுதாள்
போதேவருந்தடங்கண் பொன்னுருவிதான்பார்த்து
(நீ)ஆர்பெண்ணேதாதி அறியவுரையுமென்றாள்
மாநகரமாளும் மகராசன்தேவியற்கு
பேடைமயில்கண்ணாள் பெருந்திருவாள்தாதியென்றாள்
(நீ)இவ்விடம்வந்ததை எனக்கறியச்சொல்லுமென்றாள்
பேடைமயில்கண்ணாள் பெருந்திருவாள்நாயகமும்
(உன்னை)அரைநாழிகைக்குள் அழைத்துவாவென்றாளே
ஆகையினாலே அடியேனும்வந்தேனே
வாருமம்மாவென்று சொல்லி வருந்தியேதெண்டனிட

பொன்னுருவி பெருந்திருவாளிடம்வந்தது.

போதேவருந்தடங்கண் பொன்னுருவிதான்கேட்டு
(அவள்)ஆகட்டுமென்று சொல்லி அப்படியேநல்லதென்
கால்சோரகைசோர கட்டழகிமெல்லியரும் [று
இடையும்நடைசோர்ந்து ஏலக்கருங்குழலும்
அஞ்சிவழிநடக்க அவளோடேகொஞ்சிவர
கொஞ்சிகொஞ்சிவழிநடந்தாள் கோதைமயிலன்னையும்
சித்திரவீதி தெருவும்பலதாண்டி
தேரோடும்வீதி தெருவும்பலதாண்டி
மாநகரமாளும் மகராசன்மாளிசென்று
பேடைமலர்கண்ணாள் பெருந்திருவாள்முன்னேவந்து
என்னையழைத்தவகை ஏதுவகைசொல்லுமென்றாள்
உன்னையழைத்தது ஒன்றாற்குறைவுமில்லை
தோகைமயில்கண்ணாள் அற்சடையாள்தானழைத்தாள்

அற்சடையான் பொன்னுருவியை அலங்கரித்து கெற்பந்தரித்ததைச் சொன்னது.

அதுக்குள்ளே அற்சடையான் ஆரணங்குமேது செய்தான்
மல்லிகைப்பூகொண்டுவந்து மாதர்க்குமுன்னேவைத்து
இந்தாருமென்றானே ஏலக்கருங்குழலாள்
போதேவருந்தடங்கண் பொன்னுருவிதான்பார்த்து
சாமல்லிப்பூவானால் சந்தோஷம்மாதருக்கு
குடமல்லிப்பூவானால் கொண்டாட்டம்மாதருக்கு
ஒருகையால்வாங்காமல் இருகையால்தான்வாங்கி [தாள்
(அவன்)இருகையால்தான்வாங்கி ஏந்திழையும்வீற்றிருந்
தோகைமயிலணையாள் அற்சடையாள்தான்பார்த்து
தேசத்தையாளும் அரியோதனப்பெருமான்
பூப்போட்டசேலை தந்தாரேயெந்தனுக்கு
பொன்போட்டசேலை தந்தாரேயெந்தனுக்கு
இருவருமாக சரிபார்ப்போம்வாருமென்று
மேல்சுத்து ஆடைதனை மெல்லியரும்தான்பார்த்தாள்
இதுபுதுமையிதுபுதுமை யானெங்குங்கண்டதில்லை
தோகைமயிலணையே அற்சடையேயென்றுசொல்ல
இருவர்முந்தாணிகளை இழுத்தந்த அற்சடையான்
போதேவருந்தடங்கண் பொன்னுருவிபட்டாடை
பற்றியிழுத்தாளே பாவைகருங்குழலும்
வட்டஸ்தனமழகும் மட்டில்வடிவழகும்
கட்டிங்குழையழகும் கையில்வளையழகும்
மார்பில்ஸ்தனமழகும் மச்சத்தின்வடிவழகும்
மச்சுவீடுபோலே மலர்ந்தஸ்தனமிரண்டும்
பச்சைநரம்பு பசுநரம்பைத்தான்பார்த்து
தோகைமயிலணையாள் அற்சடையான்கூறலுற்றாள்
அத்திபுரத்திற்கு அரசாளப்புத்திரனை
புத்திரனைப்பெற்றெடுத்து புகழ்பெறுவாய்தப்பாது
புத்திரரேஎன்றவுடன் பொன்னுருவிதான்கேட்டு
கோபம்பெரிதாகிக் கொம்பனையுங்கூறலுற்றாள்
விளம்பிவிளம்பிநீ போடீவிளம்பிநீ
போடீவிளம்பிநீ பொல்லாதஅற்சடைதான்
(என்று)வீசிநடந்தாளே விசையுடனேபொன்னுருவி
அன்னநடையாள் அழுதவிடம்பள்ளிகொண்டாள்

தங்கத்தால்மெத்தை தழுவணையுமேறலுற்றாள்
கண்ணாடிதான் துடைத்து வடிவுகளைக்காணலுற்றாள்
மார்பின்ஸ்தனமழகும் மட்டற்றவடிவழகும்
மச்சவீடுபோலே மலர்ந்தஸ்தனமழகும்
பச்சைநரம்பு பசுநரம்பைத்தானேபார்த்து
பிள்ளையிதுவென்று பொற்கொடியுந்தானினைந்து
மைந்தரிதுவென்று மங்கையருந்தானினைந்து
கோபம்பெரிதாகிக் கொம்பனையுமப்போது
மனதுகொதித்துமே மாதுநல்லாளப்போது

பொன்னுருவி தன்கணவனாகிய கருணரைத் தூஷித்தது.

இழிகுலத்தான்பிண்டத்தை இனிதீண்டப்போறேனே
தேர்ப்பாகன்பிண்டத்தைத் தீண்டேனிருகையால்
சாதிகெட்டான்பிண்டத்தைச் சற்றாகிலுந்தீண்டேன்
காஞ்சிவளநாடாளும் கருணரைவிட்டேனே
கர்ப்பூரந்தின்று கருவைக்குலைப்பேனென்றாள்
காசுண்டைதின்று கருவைக்கரைப்பேனென்றாள்
இனியமருந்துதின்று இற்றுவிழச்சாணேனென்பாள்
தாய்போல்வளர்த்தெடுத்த தாதியரைத்தானழைத்தாள்
பிறந்துவளர்ந்து பிராயமிருபதாச்சே
இதுநெடுநாள்கண்டதில்லை இப்பெரியதுக்கத்தை
ஐயமாரெல்லாம் அடங்கலுமாண்டிருக்க
ஆச்சிமாரெல்லோரும் அடங்கலுமாண்டார்கள்
எனக்குவந்த துக்கத்தை என்னென்றுசொல்லுவேன்
காஞ்சிவளநாடாளும் கருணருமிங்குவந்து
நித்திரைசோதித்து லீலைபுரிந்தானும்
கள்ளன்திருடனைப்போல் கட்டழகன்படுபாவி
மாயமருந்தாலே மயக்கினானென்னையவன்
பார்த்தேனேயாமானால் பாணத்தால்போட்டிடுவேன்
அறிந்தேனேயாமானால் அம்பாலேபோட்டிடுவேன்
கண்டேனேயாமானால் கண்டதுண்டஞ்செய்திடுவேன்
பிள்ளையுண்டாக்கினான் பொல்லாதபட்டிமகன்

பொன்னுருவி கருவையழிக்க எத்தனஞ்செய்தது.

பிள்ளைகரைக்கவேணும் பொற்கொடியேயிப்போது
மைந்தரைக்கரைக்கவேணும் மயிலணையேயிப்போது
கற்பூரந்தின்றாலே பிண்டங்கரைந்துவிடும்

உத்தனிடத்திலே கற்பூரமுண்டோவென்றாள்
கற்பூரந்தந்தாலே கட்டழகிநானிருப்பேன்
கற்பூரமில்லையென்றால் இப்போதுமாண்டிடுவேன்
தாய்போல்வளர்த்தெடுத்த தாதியவள்தான்கேட்டு
வேணுமென்றகற்பூரம்அழைப்பித்துத்தாரேனென்றாள்
போறாளவள்தாதி பொன்னாபரணமுமாய்
பொற்பிரப்பங்கோல்பிடித்து போறாளவள்தாதி
வீதியும்வீதி தெருவும்பலதாண்டி
தேரோடும்வீதி தெருவும்பலதாண்டி
மாநகரமாளும் மகாராசன்றன்சபைக்கு
தேசத்தையாளும் துரியோதனப்பெருமான்
கொலுவிருக்கும்வேளையில் கொம்பனையாள்வந்து நின்று
சிங்காதனத்திற்கு முன்பாகத்தெண்டனிட்டாள்
தெண்டனிட்ட தாதியரும் இருப்[illegible]ந்திருந்து
மோதிரமின்ன முடிமேலேகைதொழுதாள்
தேசத்தையாளும் துரியோதனப்பெருமாள்
(நீர்) ஆர்பெண்ணேதாதி அறியவுரையுமென்றான்
ஆர்பணியுமல்ல வடியேன் இருப்பணிதான்
பிறர்பணியுமல்ல பெருமாளுடபணிதான்
போதேவருந்தடங்கண் பொன்னுருவிதாதியென்றாள்
இங்கேநீவந்தவகை எனக்கறியச்சொல்லுமென்றான்

பொன்னுருவி தாதியையனுப்பி துரியோதனனிடத்தில்
கற்பூரம் வாங்கிவரச்சொன்னது.

உத்தனிடத்திலே கற்பூரம்வேணுமென்றாள்
மாதுநல்லபொன்னுருவி வாங்கிவரச்சொன்னாள்காண்
கற்பூரம்வேணுமென்றுகைதொழுது தெண்டனிட்டாள்
தேசத்தையாளும் துரியோதனன்கேட்டு
கட்டழகிமாதருக்கு கற்பூரமேதுக்கென்றான்
தாமக்குழலாளுந் தாதியருந்தான்கேட்டு
(அது) இன்னவகையென்று ஏதொன்றுநாமறியோம்
மாதுமயிலனையாள் வாங்கிவரச்சொன்னாள்காண்
தேசத்தையாளுந் துரியோதனன்கேட்டு
கட்டழகிமாதருக்குக் கற்பூரம்வேணுமோதான்
வேணுமென்றகற்பூரம் வேண்டியதுதாறேனென்றான்

பெருந்திருவாள் துரியோதனனைக்கண்டு கற்பூரம் கொடுக்க வேண்டாமென்று மறுத்தது.

பேடைமயில்கண்ணாள் பெருந்திருவாளோடிவந்து
தேசத்தையாளுந் துரியோதனன்முன்னேவந்து
ஊராளும்மன்னா ஒருவார்த்தைநீர்கேளும்
நாடாளும்மன்னா நல்வார்த்தைநீர்கேளும்
பொன்னுருவிசித்தடிக்குப் புகல்வார்த்தைநீர்கேளும்
ஐந்துமோரிங்க ..ாச்சுதுகாண்மாதருக்கு
கரும்புஅரும்பிட்டுக் கஸ்தூரிபூத்ததுபோல்
கல்லாந ..க்குள்ளே கதலிமூளைத்ததுபோல்
அத்திமரம்பூத்ததுபோல் அன்னநடைபொன்னுருவி
ம.. ..லபொன்னுருவி மைந்தருமுண்டானாள்
கற்பூ..த்தின்றாலே பிள்..ந்தரியாது
பிள்ளைத்தரியாது பொற்கொடியாள்மாண்டிடுவாள்
கற்பூரமில்லையென்று கடுகவு..ரயுமென்றாள்

துரியோதனன் பொன்னுருவி கற்பந்தரித்ததைக் கேள்வி.. மனக்களிப்படைந்தது.

தேசத்தையாளுந் துரியோதனன்கேட்டு
பூரித்திருதோளும் பொன்னுபரணமின்ன
இதயங்குளிர்ந்து இருதோளும்பூரித்து
நானுமறிவேனோடி நலமானகாரியத்தை
தாமக்குழலாளைத் தாதியரைத்தாமழைத்து
காஞ்சிநாடாளுங் கருணர்கடையிலே
அங்கேயுண்டுகற்பூ.. மிங்கில்லையென்றுரைத்தார்
தாமக்குழலாளுந் தாதியருந்தான்கேட்டு
போ..ளவன்தாதி பொன்னுபரணமின்ன
பொற்பிரப்பங்கோல்பிடித்து போருளவள்தாதி

பொன்னுருவி தாதி கருணருடமாளிகை வந்தது.

.ஞ்சிநாடாளுங் கருணருடவீதிவந்தாள்
காஞ்சிநாடாளுங் கருணருடமாளிகையில்
வாசற்படிகாக்கும் வாழ்பாண்டிமன்னவர்கள்
(நீ) ஆர்பெண்ணேதாதி அறியவுரையுமென்றார்
(நீ) ஏன்வந்தாய்தாதி எனக்கறி..க்கூறுமென்றார்
தாமக்குழலாளுந் தாதியருந்தான்கேட்டு

வாயைத்திறவாளாம் மறுவார்த்தைபேசாளாம்
மவுனமாய்த்தானிருந்தாள் மாதுகருங்குழலும்
வாசற்படிகாக்கும் மன்னவர்களேது சொல்வார்
கூடாதமங்கையற்குக் கொம்பனையேதாதிகளா
வாழாதமாதவட்கு மயிலனையேதாதிகளா
கன்னியவள்கற்பழித்த பேய்ச்சிகளோ நீங்கள்தான்
பெண்ணவள்வாயழித்த பைங்கொடியோ நீங்கள்தான்
தாய்போல்வளர்த்தெடுத்த தாதிகளுந்தான்கேட்டு
ஏதொன்றுஞ்சொல்லாமல் ஏலக்கருங்குழலும்
உட்கட்டிற்போய்ப்புகுந்தாள் உத்தமியாள் தாதியரும்
காஞ்சிவளநாடாளுங் கருணருமப்பொழுது
கனகமணிக்கட்டிலின்மேல் கருணரும்பள்ளிகொண்டார

தாதிகள் கருணரைக் கற்பூரங்கேட்டது.

தாமக்குழலாளுந் தாதியருமோடிவந்து
செம்பொன்திரைநீக்கிச் சேரவந்துதெண்டனிட்டு
அம்பொன்திரைநீக்கி அழகாகத்தெண்டனிட்டாள்
தெண்டனிட்டதாதி திரும்பஎழுந்திருந்து
மோதிரம[illegible] மடிமேலேகைதொழுதாள்
காஞ்சிநாடாளுங் கருணரவர்பார்த்து
(நீ)ஆருடையதாதி அரிவையுரையென்றார்
தாமக்கருங்குழலாள் தாதியருமேதுசொல்வாள்
ஆருடையதாதியல்ல அடியேன் திருப்பணிதான்
பேர்பணியுமல்ல பெருமாள் திருப்பணிதான்
போதேவருந்தடங்கண் பொன்னுருவிதாதியென்றாள்
இங்கேநீவந்தவகை எனக்கறியக்கூறுமென்றான்
என்வந்தாய்தாதி எனக்கறியக்கூறுமென்றான்
போதேவருந்தடங்கண் பொன்னுருவிநாயகிக்கு
கட்டழகிமாதருக்குக் கற்பூரம்வேணுமென்றாள்
கணவனிடத்திலே கற்பூரமுண்டென்று
வாங்கிவரச்சொன்னாள்காண் மாதுகருங்குழலாள்
காஞ்சிநாடாளுங் கருணரவர்கேட்டு
பூரித்திருதோளும் பொன்னாபரணமின்ன
இதயங்குளிர்ந்து இருதோளும்பூரித்து
வாழாதபெண்களுக்கு கற்பூரம்வேண்டியதோ
கூடாதபெண்களுக்குக் கற்பூரம்வேண்டியதோ

என்னையொருபொருட்டாகக் கற்பூரம்கேட்டாளோ
எந்தனையுங்கேட்க இங்கனுப்பிவைத்தாளோ
(அவளுக்கு)எதுக்குகற்பூரம் எனக்கறியச்சொல்லுமென

துற்சடையாள் கருணருக்குச்சொல்லி கற்பூரம்
கொடுக்காமற்றடுத்தது.

தோகைமயிலனையாள் துற்சடையாள்தான்கேட்டு
ஊராளுமன்னா ஒருவார்த்தை நீர்கேளும்
நாடாளுமன்னா நல்வார்த்தை நீர்கேளும்
சேயிழையும்நா[illegible] சோத்துசில்புனைந்தோம்
மாதுநல்லபொன்னுருவி மைந்தருமுண்டானாள்
கரும்புகுறும்பிட்டு கஸ்தூரிபூத்தாப்போல்
கல்லாற்றுக்குள்ளே கதலிமுளைத்தாப்போல்
மலடுள்ளவாசலுக்கு மைந்தர்களுமுண்டாச்சு
அம்பலத்துவாசலுக்கு ஆண்பிள்ளைபெற்றிடுவாய்
கற்பூரந்தின்றாலே பிண்டந்தரியாது
பிண்டந்தரியாது பொற்கொடியாள்மாண்டிடுவாள்
செத்துமடிந்திடுவாள் சிவலோகஞ்சேர்ந்திடுவாள்
மாண்டுமடிந்திடுவாள் வைகுண்டஞ்சேர்ந்திடுவாள்
கற்பூரமில்லையென்று கடுகவுரையுமென்றாள்
காஞ்சிநாடாளுங் கருணரவர்கேட்டு
இதயங்குளிர்ந்து இருதோளும்பூரித்து
உள்ளங்குளிர்ந்து உடம்பெல்லாம்பூரித்து
நானுமறிவேனடி நவில்வாயிலம்பிறையே
எனக்குத்தெரியுமோதான் ஏலங்கருங்குழலே
படுக்கைதனைத்தட்டி பச்சைவடமுதறி
அப்பட்டிதானுதறி துரைமகள்தான்போர்த்து
முத்துமணியடியாம் மேற்குமிழ்கள்ரத்தினமாம்
செம்பொன்மிதியடிமே லேறியந்தச்சீர்கருணர்
[illegible]த்துத்தெருதாண்டி தேரோடும்வீதிவந்து
கொந்தம்பூமன்னருடன் கொடைதாரைதானழைத்தார்
கொந்தம்பூமன்னவர்கள் கொடைதாரையுடன்வந்தார்
முத்துக்குடையாம் முழுமாணிக்கப்பொற்குடையாம்
தங்கக்குடையாம் தவளநெடுங்குடையாம்
பொன்னுக்குடையாம் புகழுடையமுக்குடையாம்
எடுத்துநிறைத்தார்கள் எண்ணாயிரங்குடைகள்

பக்கந்நிறைத்தார்கள் பதினாயிரங்குடைகள்
சுற்றிநிறைத்தார்கள் சூரியனைக்காணார்கள்
ஒற்றைக்குடை நடுவில் இருந்தந்தவத்தமர்கள்
பூச்சக்ரக்குடை நடுவில் இருந்தந்தப்புண்ணியர்கள்

கருணமகாராஜன் பறையறையுஞ் சாம்புவனை
அழைத்து சகலவர்த்தகரும் கற்பூரம்விற்காதிருக்கும்படி.
பறைசாற்றச் சொன்னது.

பறையறையும்மன்னவனை சாம்புவனைத்தானழைக்க
பறையறையுமன்னவர்கள் சாம்புவர்களோடும்வந்து
தூரவிருந்து தொழுதிரங்கித்தெண்டனிட்டு
என்னையழைத்தபணி ஏதுபணியெம்பெருமான்
உன்னையழைத்தது ஒன்றுற்குறைவுமில்லை
அத்தி[illegible]நகரில் அறுபதுகடைகளுண்டே
அந்தக்கடைதனிலே ஆரொருவர்கற்பூரம்
விற்றார்களானக்கால் வீ[illegible]க்கஞ்சேர்த்திடுவேன்
ஆரொருவர்கற்பூரம் கொண்டதையுண்டானால்
ஊருக்குமேற்கே உயிர்க்கழுவுபோட்டிடுவேன்
தாமமணிகட்டி தறித்துவைப்பேன்பூமுடியை
நாக்கோடேமூக்கறுத்து நகர்விட்டுவோட்டிவைப்பேன்
அப்படிக்கென்று ஆசுழுழக்குமென்றான்

சகலராஜருமறியும்படிச் சாம்புவர்கள்
பறையறைந்தது.

பறையறையுமன்னவர்கள் சாம்புவர்கள்தான்கேட்டு
அருளாருளுமென்னையா அப்படிக்கேயாகுதென்று
வெள்ளியால்பறைகொண்டு வெண்கலத்தால்கோலாணி
யானையின்மேலேவைத்து அலங்காரம்போட்டனற்றார்
அத்திபுரத்துப் பெருந்தெருவேவந்துநின்று
அடித்தார்தமுக்கோசை அந்நகருதானதிர
அடித்ததமுக்கோசை அந்நகரில்தான்கேட்டு
சிலமன்னரெல்லாரும் திடுக்கிட்டெழுந்திருந்து
வர்த்தகரும்செட்டிகளும் வருத்தமுடன்தானெழுந்து
கடைக்காரரெல்லாம் கனமுடனேதானெழுந்து
என்னமோகாரணமோ ஏதொன்றுநாமறியோம்
பறையறையுமன்னவர்கள் பார்மன்னர்முன்னேவந்து

ஏதுக்கறைந்தீர்காண் எனக்கறியக்கூறுமென்றார்
பறையறையுமன்னர்களும் சாம்புவருந்தான்கேட்டு
காஞ்சிநாடாளுங் கருணைருடவுத்திரவு
ராசாக்கள்காரியங்கள் தாமறியக்கூடாது
கஷ்திரியர்காரியங்கள் கலக்கம்வெளிப்படுமோ
(இந்த) அத்திபுரத்திலே அறுபத்திரண்டுகடை
ஆரொருவர்கற்பூரம் விற்றதேயுண்டானால்
ஆரொருவர்கற்பூரம் கொண்டதேயுண்டானால்
ஊருக்குமேற்கே உயிர்க்கழுவுபோட்டிடுவேன்
தாமணிகட்டி தறித்துவைப்பேன்பூமியிலே
நாக்கோட்டறுக்கறிந்து நகர்விட்டோட்டிடுவேன்
அப்படிக்கென்று அறைந்[illegible]தமுக்கென்றான்
கடைக்காரர்தான்கேட்டு கலங்கிமனந்தளர்ந்து
கற்பூரச்சரக்கையெல்லாம் கட்டியொருபுறமாய்
கட்டியொருபுறமாய்க் கடலிலேவிட்டெறிந்தார்
இப்படியாக இவரிருக்கும்வேளையிலே
தாமக்குழலாளுந் தாதியவளேதுசெய்தாள்
தாமக்குழலாளுந் தலைவிரித்தோடலுற்றாள்
போதேவருந்தடங்கண் பொன்னுருவிமாளிசென்றாள்
போதேவருந்தடங்கண் பொன்னுருவிநாயகமும்
வாசற்படியிருந்து மயிலணையும்பார்த்திருந்தாள்
தாமக்குழலாளுந் தாதிகளுமுன்னேவந்து
கற்பூரத்திற்குப்பட்ட களையெல்லாம்போதுமென்றாள்
எந்தனுக்குங்கிட்டாது ஏலக்கருங்குழலே
போதேவருந்தடங்கண் பொன்னுவிதான்கேட்டு
(நீ) தாதியொருத்தி தாமழிப்பாயென்றறியேன்
மோப்பியொருத்தி மூளைகுலைப்பாயென்றறியேன்
அன்னநடையா ளழுதுவிடம்பள்ளிகொண்டாள்
கற்பூரங்கிட்டலையோ காளையதுபட்டணத்தில்
என்றுமவள்சொல்லி யிருக்கிறவேளையிலே

பொன்னுருவி தாதிகளை மாங்காய்கேட்டதின்மேல்
இல்லையென்றுரைத்தது.

மயிலணையாள்பொன்னுருவி மசக்கைக்குணமாகி
மாதுநல்லாள்பொன்னுருவி மாங்காய்மனதாகி
தாய்போல்வளர்த்தெடுத்த தாதியரைத்தானழைத்து
எந்தன் தனக்கு ஒருமாங்காய்வேண்டுமென்றாள்

தாமக்குழலாளுந் தாதியருந்தான்கேட்டு
(நான்)கற்பூரங்கொள்ள கடையெல்லாஞ்சுற்றிவந்தேன்
காஞ்சிநாடாளுங் கருணையவர்பார்த்து
கடைகள்கடைத்தெருவில் கட்டியடித்தாரே
கற்பூரத்திற்குப்பட்ட கஷ்டமெல்லாம்போதுமம்மா
மாங்காயுங்கிட்டாது மாலைக்கருங்குழலே
(உன்) மாமிபெருந்திருவாள் மயிலனையைக்கேட்டாலே
வேண்டுமென்றமாங்கனிகள் வேணதுதான்தருவாள்
அங்கேநீகேளுமென்றாள் ஆரணங்குதாதியரும்

பொன்னுருவி பெருந்திருவாளை மாங்கனிகேட்டது.

போதேவருந்தடங்கண் பொன்னுருவிதான்கேட்டு
மாமியார்மாளிகைக்கு வாராள்மயிலனையாள்
மாமியார்கண்டங்கே வாராய்மயிலனையாய்
இங்கேயிருமென்று இடஞ்சுட்டித்தட்டலுற்றாள்
தட்டிங்குழலிடத்தே தார்குழலாள்வீற்றிருந்தாள்
பேடைமயில்கண்ணாள் பெருந்திருவாள்தான்பார்த்து
வேர்க்கவிருவிருக்க வந்த அவசரமேன்
வந்ததொருகாரியத்தை வகைதெரிந்துகூறுமென்றாள்
போதேவருந்தடங்கண் பொன்னுருவிகூறுவாள்
ஆங்கந்தானடி அம்மானைதானடி
பந்தாடிசெண்டாடி பள்ளாங்குழியாடி
ஒற்றைக்கால் மண்டபத்தில் உஞ்சல்கயிறாடி
பளிங்குமாமண்டபத்தில் பைங்கிளிநான்வீற்றிருந்தேன்
ஏதோவிடாய்பெரிதாய் மாங்காய்மனதாச்சு
உத்தனிடத்திலே ஒருமாங்காய்வேணுமென்றாள்
பேடைமயில்கண்ணாள் பெருந்திருவாள்தான்கேட்டு [ள்
வேணுமென்றமாங்கனிகளைப்பித்துதாரேனென்று
தோகைமயிலனையாள் ஆற்சபையாளோடிவந்து
ஊராளுமாமி ஒருவார்த்தைநீகேளும்
நாடாளுமாமியொரு நல்வார்த்தைநீர்கேளும்
போதேவருந்தடங்கண் பொன்னுருவிநாயகமும்
மாங்காயும்கேட்டாளே மாலைக்கருங்குழலும்
(ஒரு)மாங்காய்க்கீத்தாளுனு மகனோடேபேசவைப்போம்
மாங்கனிக்குத்தாளுக கருணருடன்பேசவைப்போம்
மாங்காயுமில்லையென்று மாதற்குறையுமென்றாள்

பெருந்திருவாள் பொன்னுருவியை உன் மாமனாரை மாங்கனிகேளென்று சொன்னது.

பேடைமயில்கண்ணாள் பெருந்திருவாள் தான்கேட்டு
அப்படியேசம்மதித்தாள் ஆரணங்குமப்பொழுது
போதேவருந்தடங்கண் பொன்னுருவி நாயகியை
(உங்கள்)மாமாவைக்கேட்டாலே தருவாரேமாங்கனியும்
அங்கேயுண்டுமாங்கனிகள் இங்கில்லையென்றுரைத்தாள்
போதேவருந்தடங்கண் பொன்னுருவிதான்கேட்டு
மாமனார்மாளிகைக்கு வாராள்மயில்போலே
தேசத்தழகன் துரியோதனப்பெருமான்
காஞ்சிநாடாளுங் கருணனுடன்கூட
சாயாம்புமேனி சகுனியவனுடனே
சொக்கட்டான்சூது சதுரங்கந்தானாடி
போகின்றமன்னருக்குப் போகவிடைகொடுத்து
அங்கிருந்தமன்னர்களை அனுப்பிவிடைகொடுத்து
தனியாகவீற்றிருந்தான் தாமமுடியானும்

பொன்னுருவி துரியோதனனை மாங்கனிகேட்டது.

போதேவருந்தடங்கண் பொன்னுருவிநாயகியும்
மாமனெதிரில்வந்து மாலைக்கருங்குழலும்
வணங்காமுடியும் வயிரத்திரைகுழலாள்
மாங்காய்க்குத்தானாக மாமாவைத்தெண்டனிட்டாள்
தேசத்தையாளுந் துரியோதனன்பார்த்து
என்னவென்று தெண்டனிட்டாய் பிள்ளைகளைப்பெற்றடு
தெண்டனிட்டகாரியம் தெரியவுரையுமென்றான் [வாய்
போதேவருந்தடங்கண் பொன்னுருவிகூறுவாள்
ஆங்கந்தானாடி அம்மானார்தானாடி
[illegible]ந்தாடிசெண்டாடி பள்ளாங்குழியாடி
ஒற்றைக்கால்மண்டபத்தில் உஞ்சலிலாடி
பளிங்குமாமண்டபத்தில் [illegible]அங்கிரிநான்வீற்றிருந்தேன்
ஏதோவிடாய்பெரிதாய் ஒருமாங்காய்மனதாகி
உந்தனிடத்திலே ஒருமாங்காய்வேணுமென்றாள்
தேசத்தையாளுந் துரியோதனன்தான்கேட்டு
மாங்கனிகேட்கவந்த மங்கையவளைத்தான்பார்த்து
இத்தனைநாளில்லாதே இதுநெடுநாளன்றியிலே
நீமாங்காய்கேட்கக் காரியமேன்மங்கையரே

போதேவருந்தடங்கண் பொன்னுருவிதான்கேட்டு
உப்புரையவேண்டலையே உரியில்தயிர்வேண்டலையே
காட்டாஞ்சிவேண்டில்லை கச்சாயம்வேண்டில்லை
ஏதோவிடாய்பெரிதாய் ஒருமாங்காய்மனதாகி
ஒருமாங்காய்வேணுமென்று உத்தமியுந்தெண்டனிட்டா
தேசத்தையாளுந் துரியோதனன்தான்கேட்டு [ள்
பூரித்திருதோளும் பொன்னுபரணமின்ன
வேணுமென்றமாங்கனிக ளழைப்பித்துதாரேனென்றார்

பெருந்திருவாள் துரியோதனனை
பொன்னுருவிக்கு
மாங்கனி கொடுக்கவேண்டாமென்று சொன்னது.

பேடைமயில்கண்ணாள் பெருந்திருவாளோடிவந்து
மாநாகங்கொண்ட மகராசன்முன்னேவந்து
(அவள்) கண்சாடைகாட்டினாள் கமலப்பூநாயகியாள்
தேசத்தையாளுந் துரியோதனன்தான்பார்த்து
தனியேயெழுந்துவந்தான் தாமமுடியானும்
பேடைமயில்கண்ணாள் பெருந்திருவாள்நாயகமும்
மறைவாய்வந்தாளே மாலைக்கருங்குழலும்
தேசத்தரசன் துரியோதனனுடனே
மாலைமுடியானும் மயிலணையுங்கூறலுற்றாள்
ஊராளுமன்னா ஒருவார்த்தைநீர்கேளும்
நாட்டாளுமன்னா நல்வார்த்தைநீர்கேளும்
போதேவருந்தடங்கண் பொன்னுருவிநாயகியும்
மாங்காயுங்கேட்டாளே மாலைக்கருங்குழலும்
மாங்காயுமில்லையென்று மன்னவரேநீருரைத்தால்
மாங்காய்க்குத்தானுமக்கு மன்னோடே பேசவைப்போம்
ஒரு-மாங்காய்க்குத்தானாக கருணருடன்பேசவைப்போம்
மாங்காயுமில்லையென்று மன்னவரேசொல்லுமென்றாள்
தேசத்தழகன் துரியோதனன்தான்கேட்டு
பூரித்திருதோளும் பொன்னுபரணமின்ன
இதயங்குளிர்ந்து இருதோளும்பூரித்து
உள்ளங்குளிர்ந்து உடம்பெல்லாம்பூரித்து
அப்படிக்கேசெய்வேனென்றான் ஆனந்தவாழ்மார்பன
போதேவருந்தடங்கண் பொன்னுருவிமுன்னேவந்து

துரியோதனன் மாங்கனி இல்லையென்றுசொல்ல பொன்னுருவி விசனமடைந்தது.

போதேவருந்தடங்கண் பொன்னுருவிநாயகமும்
காஞ்சிநாடாளுங் கருணருடசோலையிலே
அங்கேயுண்டுமாங்கனிக ளிங்கில்லையென்றுரைத்தார்
போதேவருந்தடங்கண் பொன்னுருவிதான்கேட்டு
ஊராளுமாமா ஒருமாங்காய்கிட்டாதோ
நாடாளுமாமா நல்மாங்காய்கிட்டாதோ
(என்) ஐயமார்பாண்டியர்கள் அரசாளும்நாளையிலே
(என்) ஆச்சிமாரெல்லாரும் இருக்கின்றநாளையிலே
சாக்கடைகள்தோறும் [illegible]துவிழுமாங்கனிகள்
புறக்கடைகள்தோறும் பெருத்துவிழுமாங்கனிகள்
அடித்துப்பழங்கொடுக்க ஆருண்டிவ்வையகத்தில்
திட்டிப்பழங்கொடுக்கத் திக்கற்றபாவியானேன்
என்றுசொல்லிமங்கையரும் ஏங்கிப்புலம்பலுற்றாள்
கூவியழுதாளே கொம்பின்கிளிபோலே
கோபித்துத்தானழுதாள் கோயிலன்னம்போலாக
வாய்திறந்துதானழுதாள் மாதுநல்லபொன்னுருவி

பொன்னுருவி விசனப்படுவதைக்கண்டு துரியோதனன் மாங்கனி கொடுக்கிறேனென்றது

தேசத்தையாளுந் துரியோதனன்பார்த்து
சிந்தைகலங்கி இடுக்கிட்டுத்தானெழுந்து
மன்னன்மனஞ்சலித்து மிருவார்த்தையேதுரைப்பான்
போதேவருந்தடங்கண் பொன்னுருவிநாயகமே
(நாளை)மத்தியானவேளைக்கு வந்தாயேயாமாகில்
வேணுமென்றமாங்கனிக ளழைப்பித்துத்தாரேனென்றார்
போதேவருந்தடங்கண் பொன்னுருவிதான்கேட்டு
அவளாகட்டுமென்றுசொல்லி அப்படிக்கேநல்லதென்று
சந்தோஷப்பட்டாள் சரீரங்குளிர்ந்தாள்
[illegible]யுடனே ஆனந்த[illegible]ம்மாரி
(அவள்)அன்னநடையுமே ஆவித்துப்பள்ளிகொள்ள
தங்கத்தால்மெத்தை தழுவணையின்மீதுசெல்வாள்
மாதுநல்லபொன்னுருவி மசக்கைகுணமாகி
மாதுநல்லபொன்னுருவி மாங்காய்மனதாகி
இப்படியாக இருக்கின்றவேளையிலே

பொழுதுவிடிந்தது பொற்கோழிகூவிற்று
கங்குல்விடிந்தது கதிரோனும்வந்துதித்தான்
ஈஸ்வரனார்கோவிலுக்கு திருக்காப்புசென்றது
தேசத்தழகன் துரியோதனப்பெருமான்
பள்ளிவிட்டுக்கீழிறங்கி பங்கயஞ்சீர்கண்ணனும்
மாலைமுடியானும் மல்லிகைப்பூதின்றுதறி
பாகைவிரித்துப் பட்டாடைமேல்சாத்தி
முத்துமிதியடியைத் தொட்டுமிகநடந்து
அரண்மனையேழுகட்டும் அன்பாகத்தான்கடந்து
தெற்குத்தெருதாண்டி தேரோடும்வீதிவிட்டு
வைகைக்கரைதனிலே வந்தாரேப்பொழுது
முல்லையிதழொடித்து முத்துப்போல்பல்விளக்கி
பாளைகொண்டுபல்விளக்கி ஓலைகொண்டுநாவழித்து
தீர்த்தநீர்வாங்கி திருவாயுங்கொப்பளித்து
வசந்தநீர்வாங்கி மதிமுகமுஞ்சுத்திசெய்து
சிவசிவாவென்று திருநீற்றுக்காப்பணிந்து
அரகராவென்று அணிந்தாரேவெண்ணீற்றை
பாகைவிரித்துடுத்தி பட்டாடைமேல்போர்த்தி
முத்துமிதியடியைத் தொட்டுமிகநடந்து
வசந்தமாமண்டபத்தில் மன்னரெழுந்தருள
அங்குஞ்சிலமன்னவர்கள் அவசரமாயோடிவந்து
இட்டசிங்காதனங்கள் எழிலானமன்னருக்கு
இட்டசிங்காதனத்தில் எழில்மன்னன்வீற்றிருந்து

துரியோதனன் தோட்டக்காரனை அழைத்து
மாங்கனி பறித்துவரச்சொன்னது.

மாஞ்சோலைதோட்ட காவலனைத்தானழைத்தான்
மாஞ்சோலைதோட்டத்து மன்னவரும்ஓடிவந்து
சிங்காதனத்திற்கு முன்பாகத்தெண்டனிட்டு
என்னையழைத்தபணி ஏதுபணிசொல்லுமென்றான்
தேசத்தையாளுந் துரியோதனன்தான்கேட்டு
உன்னையழைத்தது வொன்றுக்குறைவுமில்லை
மாங்கனிதோட்டத்தில் மன்னவரேபோய்புகுந்து
இனுசுக்கொருமாங்கனியை தீவிரமாய்நீர்பறித்து
வகைக்கொருமாங்கனியை மன்னவரே நீர்பறித்து
கூடையில்மாங்கனியை கொற்றவரேநீரெடுத்து

கடுகெனவேவாருமென்று கட்டளையுமிட்டார்கள்
மாஞ்சோலைகாக்கின்ற மன்னவருந்தான்கேட்டு
(அவர்)கட்டடியுமோரடியாய் எட்டிமிகநடந்து
மாங்கனிச்சோலையிலே மன்னவருமுட்புகுந்து
வகைக்கொருமாங்கனியை வகைவகையாய்தான்பறித்து
கூடையில்மாங்கனியை சொற்றவருந்தானிரப்பி
தூக்கிநடந்தார்காண் துரிதமுடனப்பொழுது
எடுத்துநடந்தாரே எழில்பெரியமன்னவரும்
தேசந்தழைகன் துரியோதனன்முன்னேவந்து

துரியோதனனிடத்தில் தோட்டக்காரர் மாங்கனி
கொண்டுவந்து கொடுத்தது.

கூடையில்மாங்கனியை சொற்றவர்க்குமுன்னேவைத்தார்
தேசத்தையாளுந் துரியோதனன்பார்த்து
மாஞ்சோலைக்காவலரை மன்னவருந்தானழைத்து
மாங்கனிக்கூடைதனை மன்னவரே தூக்குமென்று
பள்ளியறைமண்டபத்தில் வந்தாரேயப்பொழுது
பேடைமயில்கண்ணாளின் உட்கட்டில்போய்புகுந்து
கட்டிலின்கீழாகக் கொட்டிப்பரப்புமென்றார்
தட்டெட்டாய்மாங்கனியைக் கொட்டிப்பரப்பிவைத்தார்
இப்படியாகவே இவரிருக்கும்வேளையிலே

பொன்னுருவி மறுநாள் துரியோதனனிடத்தில்
மாங்கனிக்காக வருகிறது.

பொழுதுவிடிந்தது பகலவனும்வந்துதித்தார்
கங்குல்விடிந்தது கதிரோனும்வந்துதித்தார்
செங்கண்மால்கோவிலுக்கு திருக்காப்புச்சென்றது
போதேவருந்தடங்கண் பொன்னுருவிதானெழுந்து
மாதுநல்லாள்பொன்னுருவி மசக்கைக்குணமாகி
மாதுநல்லாள்பொன்னுருவி மாங்காய்மனதாகி
மாமனூர்மாளிகைக்கு வாராள்மயில்போலே
இப்படியாக இருக்கின்றவேளையிலே

பெருந்திருவாள் கருணனை அழைத்து பொன்னுருவி
யுடன் பேசவிக்கத் தந்திரஞ்சொன்னது.

பேடைமயில்கண்ணாள் பெருந்திருவாள் தான்பார்த்து
காஞ்சிநாடாளுங் கருணனைத்தானழைத்தாள்

காஞ்சிநாடாளுங் கருணருமோடிவந்து
மாதாவின்பாதம் மலர்துவிதெண்டனிட்டான்
என்னையழைத்தபணி ஏதுபணிஎன்னுச்சி
பேடைமயில்கண்ணாள் பெருந்திருவாள்கூறுவாள்
மாதுநல்லாள்பொன்னுருவி மாங்காய்மனதாகி
மாங்காய்மனதாகி வருவாள்மயிலனையும்
தட்டியெழுப்புவாள் தாமக்குழலாளும்
பள்ளிகொள்ளுமென்றுளே பங்கயஞ்சீர்கண்ணாளும்
காஞ்சிநாடாளுங் கருணரவர்கேட்டு
சந்தோஷப்பட்டார் சரீரங்கள்பூரித்தார்
உள்ளங்குளிர்ந்தார் உடம்பெல்லாம்பூரித்தார்

பெருந்திருவாள் கருணனை
துரியோதனனைப்போல சிங்காரித்து முக்காடிட்டு
படுத்திருக்கச் சொன்னது.

அறுபத்துநான்குமுழம் அழகானபச்சைவடம்
மூக்காடுபோட்டு மூடிமன்னன்பள்ளிகொண்டான்
இப்படியாக யிருக்கின்றவேளையிலே
போதேவருந்தடங்கண் பொன்னுருவிநாயகமும்
மாமனூர்வாசலுக்கு வந்துநுழைந்தாளே
பேடைமயில்கண்ணாள் பெருந்திருவாள்தான்பார்த்து
போதேவருந்தடங்கண் பொன்னுருவிநாயகமே
வந்ததொருவயணமதை வாய்திறந்துகூறுமென்றாள்
போதேவருந்தடங்கண் பொன்னுருவிநாயகமும்
மாங்காயுந்தாரோமென்று மன்னர்வரச்சொன்னார்
மாங்கனிக்காக வரச்சொன்னாரகாணென்மாமா
மாமாவும்எங்கேஎன்றாள் மைக்குழலக்கருங்குழலும்

பொன்னுருவி துரியோதனன் எங்கேயென்று
பெருந்திருவாளைக் கேட்டது.

பேடைமயில்கண்ணாள் பெருந்திருவாள்கூறுவாள்
தலைநோவுகண்டதென்று தாமமுடியாளும்
மூக்காடுபோட்டு மூடிமன்னர்பள்ளிகொண்டார்
அப்பட்டிபோர்த்து அரைமன்னர்பள்ளிகொண்டார்
வந்தசெனங்களெல்லாம் வாசலிலேகாத்திருக்க
போசனங்களுண்ணவில்லை பொற்கொடியேயுன்மாமா
கட்டியெழுப்புமென்றாள் தாமக்கருங்குழலும்

பொன்னுருவி மாமனாரைத்தட்டி எழுப்பினது.

அவள்-ஆகட்டுமென்றுசொல்லி அப்படியேநல்லதென்
மன்னவனார் தன்னருகில் வந்தாளேமெல்லியரும்
மாமா-ஆடல் அடிசில் ஆறியிருக்கிறது
பட்டணத்துவெள்ளாளே பஞ்சாங்கங்கேட்கவில்லை
பஞ்சாங்கம்கேட்கவில்லை பாலமுதம்கேட்கவில்லை
மதிப்பேபெரிதுடைய மாமாவெழுந்திரென்றாள்
காஞ்சிநாடாளுங் கருணரவர்கேட்டு
குஞ்சிரிப்புக்கொண்டு குலுங்கநகைநகைத்தான்
போதேவருந்தடங்கண் பொன்னுருவிதான்பார்த்து
மாமி-உடம்புகுலுங்குது உத்தமரும்பேசவில்லை
மற்றுமொருதரம் தட்டிஎழுப்புமென்றாள்
மாமா-ஆடல் அடிசல் ஆறியிருக்கிறது
பட்டணத்துவெள்ளாளே பஞ்சாங்கங்கேட்கவில்லை
பஞ்சாங்கங்கேட்கவில்லை பாலமுதமுண்ணவில்லை
நம்மொத்தராசாக்கள் பசியோடுகாத்திருக்க
சரியொத்தராசாக்கள் தானங்கேவீற்றிருக்க
துய்யர்குலத்தில் துரோணருங்காத்திருக்க
எல்லாருங்காத்திருக்க என்மாமாஎழுந்திரென்றாள்
தட்டிஎழுப்பினாள் தாமக்கருங்குழலும்
முக்காடுநீக்கி [illegible]மன்னர்தான்பார்த்தார்
அப்பட்டிநீக்கி துரைமன்னர்தான்பார்த்தார்

பொன்னுருவி கருணரைப்பார்த்து அந்தப்புரத்தில் ஒளித்துக்கொண்டது.

கருணர்திருமுகத்தைக் கண்டவுடன்பொன்னுருவி
திக்கென்றெழுந்திருந்து தேனேகருங்குழலும்
தேனேகருங்குழலும் திமிதிமின்றோடலுற்றாள்
மஞ்சனீர்சாலையிலே மாதவள்போய்புகுந்தாள்
காஞ்சிநாடாளுங் கருணரெழுந்திருந்து
(அவர்) கூடத்தொடர்ந்தாரே கொற்றவனார்வீரியரும்
போதேவருந்தடங்கண் பொன்னுருவிமுன்னேவந்து
பார்த்தார்பலகாலும் பங்கயஞ்சீர்கண்ணாளை

பொன்னுருவி கருணரைப்பார்த்தோடும்போது மூர்ச்சையாகி விழுந்தது.

(அவள்) கைகால்கள்சோர்ந்து களையாயிருப்பதை
கண்ணாலேகண்டாரே கட்டழகரப்பொழுது

(அவர்) உள்ளமும்பூரித்து உடம்பும்விட விடத்து
மாங்காய்க்குத்தானாக மாண்டாளேபொன்னுருவி
மாங்காய்க்குத்தானாக செத்தாளேபொன்னுருவி
செத்தாடிபொன்னுருவி வாடிபெருந்திருவாள்
மாண்டாடிபொன்னுருவி வாடி நீ துற்சடையாள்
கூவியழைத்தாரே கொற்றம்பூராசாவும்
அழைத்ததொருசத்தத்தை ஆச்சியருந்தான்கேட்டு
பேடைமயில்கண்ணாள் பெருந்திருவாள்தான்கேட்டு
(அவள்) உள்ளமுருகி உடம்பும்விடவிடத்து
ஓட்டம்பெருநடையாய் ஓடிவந்து முன்னே நின்றாள்
தோகைமயிலனையாள் துற்சடையாளோடிவந்து
இருவருங்கூடியே எதிராகவந்து நின்றார்
பேடைமயில்கண்ணாள் பெருந்திருவாள் நாயகரும்
காஞ்சிநாடாளும் கர்ணருடன் ஏது சொல்வாள்
நான்செய்தவேலையல்ல நன்மையுள்ள எம்மகனே
தோகைமயிலனையாள் துற்சடையாள் செய்தவேலை
காஞ்சிநாடாளுங் கர்ணரவர்கேட்டு
தோகைமயிலனையே துற்சடைப்பூதாக்கமே ...
மாங்காய்க்குத்தானாக மாண்டாளேபொன்னுருவி
மாங்காய்க்குத்தானாக செத்தாளேபொன்னுருவி
செத்தாளேபொன்னுருவி சேர்ந்திழவுக்காணுமென்றான்
மாண்டாளேபொன்னுருவி மாரிழவுகாணுமென்றான்
தோகைமயிலனையாள் துற்சடையாள்தான்கேட்டு
செத்தாள்பிழைத்தாக்கால் எனக்கென்ன தாராயோ
மாண்டாள்பிழைத்தாக்கால்எனக்கென்ன தருவாயென்று
கர்ணர் பொன்னுருவின் மடியிலெடுத்துக்கொண்டு
சந்தோஷமடைந்தது,
வாரியெடுத்து வலதுதொடையில்வையும்
காஞ்சிநாடாளுங் கர்ணரவர்கேட்டு
வாரியெடுத்து வலதுதொடையில்வைத்தான்
கட்டியெடுத்து கர்ணர்தொடையில்வைத்து
கன்னியவளைத்தான்பார்த்து கர்ணர் அழுகலுற்றார்
அப்படியும்தானழுக அன்னேரவேளையிலே
கர்ணரிடைகாக்குங் கஸ்தூரிப்பொன்வாசனையாள்
மூர்ச்சைதெளிந்து எழுந்தாள்முழுகுழலாள்
கர்ணர் திருமுகமுங் கவசகுண்டலங்கண்டவுடன்

தேனுங்கருங்குழலும் திமிதிமென்றோட லுற்றாள்
போதேவருந்தடங்கண் பொன்னுருவிநாயகளும்

பொன்னுருவி தன்னரண்மனை வந்துசேர்ந்தது.

ஓட்டம்நடையுமாக ஒருநொடியிலோடிவந்து
ஆனந்தவாழ்மார்ப னரண்மனையி லுட்புகுந்து
அன்னநடைபொன்னுருவி அழுதவிடம்பள்ளிகொண்
மாதுநல்லாள்பொன்னுருவி மசக்கைகுணமாகி [டாள்
மாதுநல்லாள்பொன்னுருவி மாங்காய்மனதாகி
இப்படியாக இவளிருக்கும்வேளையிலே

கர்ணர் தோட்டக்காரரை அழைத்து மாங்கனி
பறித்துக்கொண்டு வரச்சொன்னது.

காஞ்சிநாடாளும் கர்ணர்பெருமாளும்
மாமரத்தோப்புதனில் மன்னவரும்போய்புகுந்து
மாங்கனிக்காவலரை மன்னவரைத்தானழைத்தார்
மாங்கனிக்காவலர்கள் மன்னவர்களோடிவந்தார்
என்னையழைத்தபணி ஏதுபணிசொல்லுமென்றார்
உன்னையழைத்தது ஒன்றுற்குறைவுமில்லை
வகைக்கொருமாங்கனியை வரிசையாய்த்தான்பறித்து
இனுசுக்கொருகனியை தீவிரமாய்நீபறித்து
கோணியில்மாங்கனியைக் கொட்டியேமூட்டைகட்டி
போதேவருந்தடங்கண் பொன்னுருவிநாயகிக்கு
அவளுடையமாளிகைக்கு அனுப்பவேவேணுமென்றார்
மாங்கனிக்காவலர்கள் மன்னவர்கள்தான்கேட்டு
(அவர்) ஆகட்டுமென்றுசொல்லி பட்சணமேதானடந்து
மாங்கனிச்சோலையிலே மன்னவருமுட்புகுந்து
கொம்பில்பழுத்திருக்கும் கோதுபடாமாங்கனியும்
கிளைகளின்ஓரத்தில் காய்த்திருக்கும்மாங்கனிகள்
வகைக்கொருமாங்கனியைவகைவகையாய்தான்பறித்தார்
இனுசுக்கொருகனியைத் தீவிரமாய்த்தான்பறித்தார்
கோணியில்கொட்டியே கட்டினார்காவலரும்
தூக்கியெடுத்தார்கள் துரிதமுடன்போய்நடந்தார்
காஞ்சிநாடாளும் கர்ணரும்பின்தொடர்ந்தார்
மாந்தோப்பைவிட்டு மன்னவர்கள்வாறார்கள்
தெற்குத்தெருதாண்டி தேரோடும்வீதிவிட்டு
மாடோடும்வீதிவிட்டு மன்னவர்கள்வாறார்கள்

போதேவருந்தடங்கண் பொன்னுருவிமாளிவந்தார்
காஞ்சிநாடாளும் கர்ணர்பெருமாளும்
மாணிக்கத்தூணருகே மறைவாகத்தானிருந்தார்
இப்படியாக இவரிருக்கும்வேளையிலே

காவலர்கள் பொன்னுருவிக்கு மாங்கனி
கொண்டுவந்து கொடுத்தது.

போதேவருந்தடங்கண் பொன்னுருவிநாயகிமுன்
கொண்டுவந்துகொட்டினார்கள்கொற்றவரும்மாங்கனியை
போதேவருந்தடங்கண் பொன்னுருவிதான்பார்த்து
விழியாதகண்கள்ரெண்டும் விழித்துமேதான்பார்த்து
இறவாதகண்கள்ரெண்டும் திறந்துமவள்பார்த்து
இதுயேதுமாங்கனிகள் எனக்கறியச்சொல்லுமென்றாள்
ஆர்தந்தார்மாங்கனிகள் அறியவுரையுமென்றாள்

காவலர்கள் பொன்னுருவிக்கு கர்ணர்கொடுத்த
மாங்கனியென்றுசொன்னது.

அப்போதுதூதுவர்கள் அடிவணங்கிச்சொல்லுகிறார்
காஞ்சிநாடாளும் கருணரவர்கொடுத்தார்
இந்தாருமென்றுசொல்லி எடுத்துக்கொடுத்தார்கள்
போதேவருந்தடங்கண் பொன்னுருவிதான்கேட்டு
கண்கள்சிவந்து கனலண்டிப்பொறிபறக்க
நீலவிழிக்கண்கள் நெருப்புத்தணலாக
பற்றியநாகம் பவளம்போல்கண்சிவந்து
இழிகுலத்தான்மாங்காயைத் தீண்டேனிருகையால்
சாதிகெட்டான்மாங்காயை கண்ணாலேபார்ப்பதுண்டோ
(என்று)வீசியடித்தாளே வேல்பொருதுங்கண்ணாளும்
எடுத்துமெறிந்தாளே இருகையால்மாங்கனியை
பார்த்துமவள்பற்கடித்தாள் பைங்கிளியாளப்பொழுது
எடுத்துநடவுமென்றாள் எலக்கருங்குழலும்
இப்படியாக இருக்கின்றவேளையிலே

பொன்னுருவி கர்ணன்கொடுத்த மாங்கனி வேண்டா
மென்று காவலர்வசம் அனுப்பிவிட்டது.

(அப்போ)காஞ்சிநாடாளும் கருணரவர்பார்த்து
கதித்துகனலண்டி கண்கள்பொரிபறக்க
நீலவிழிக்கண்கள் நெருப்புத்தணலாகி
நெற்றிப்புருவம் நெருப்பாயனல்பறந்து

பற்றியநாகம் பவளம்போல்கண்சிவந்து
குன்றுபோல்கண்சிவந்து கோபமதிகமதாய்
மதுரைகொள்ளத்திருமாது மாளிகையின்வாயலுள்ளே
கட்டிவரும்பாற்குடங்கள் காவலர்கள்வாசலிலே
இத்தனையுங்கண்டிருந்தாள் [illegible]லக்கருங்குழலும்
அனுப்பினமாங்கனியை ஆரணங்குவேண்டாமென்று
மன்னவரைதானழைத்துமாங்கனியைத்தூக்குமென்றாள்
அப்போதுதூதுவர்கள் அவசரமாய்த்தானெழுந்து
மாங்கனியைத்தானெடுத்து மன்னர்நடக்கலுற்றார்
தங்கள்தங்கள்மாளிகையில் தானடந்தார்தூதுவர்கள்
இப்படியாக இவரிருக்கும்வேளையிலே

பொன்னுருவி தாதியையழைத்து மறுஊருக்குப்போய்
மாங்கனிகொண்டுவரச் சொன்னது.

போதேவருந்தடங்கண் பொன்னுருவிநாயகமும்
மாதுநல்லாள்பொன்னுருவி மசக்கைக்குணமாகி
மாதுநல்லாள்பொன்னுருவி மாங்காய்மனதாகி
தாய்போல்வளர்த்தெடுத்த தாதியரைத்தானழைத்து
மாங்காயளவெடுத்து மாங்கனிபோல்பொன்னெடுத்து
பொன்னையெடுத்து புறப்படத்தானிருந்தாள்
(அப்போது)இவ்வூரைவிட்டு மறுவூருபோமென்றாள்
தாமக்கருங்குழலாள் தாதியவள்கேட்டு
எலுமிச்சம்பூப்பட்டு இழுத்துவரிந்துடுத்தி
பஞ்சவர்ணப்பூபட்டுப் பாங்கிவரிந்துகட்டி
நாமத்துளிர்பட்டெடுத்து நன்றாய்வரிந்துடுத்தி
பொன்னெடுத்துக்கைபிடித்து புறப்பட்டாள்தாதியவள்
போருளவள்தாதி பொன்னாபரணமின்ன
பொற்பிரப்பங்கோல்பிடித்துப் போருள்வள்தாதி
தெற்குத்தெருதாண்டி தேரோடும்வீதிவிட்டு
மாடோடும்வீதிவிட்டு மங்கையவள்போகலுற்றாள்
அவ்வூரைவிட்டு மறுவூரைப்போய்நடந்தாள்
அந்தந்தவூர்களெல்லாம் அலைந்தாளேமாங்கனிக்கு
தேசங்களுள்ளதெல்லாம் திரிந்தாளேமாங்கனிக்கு
எங்கெங்கேசுத்தினாலும் இளமாங்காய்கிட்டவில்லை
தேசங்கள்சுத்தினாலும் சிறுமாங்காய்காணவில்லை
மாந்தோப்புச்சோலையெல்லாம் மாமாமாயிருக்கும்

காச்சதொருமாங்காய்க் காணக்கிடையாது
மாங்காய்கிடையாதே மாலைக்கருங்குழலும்
மாங்கனிக்குதான்கொடுத்தமலர்பொன்னைத்தானெடுத்து
பொன்னைமடியில்வைத்துப் புறப்பட்டாள்தாதியரும்
எட்டடியும்ஓரடியாய் எட்டிமிகநடந்து
பத்தடியும்ஓரடியாய் பதறியவள்நடந்து
பொன்னுருவிமாளிகைக்குப் புறப்பட்டுத்தானேவாராள்
போதேவருந்தடங்கண் பொன்னுருவிநாயகியும்
வாசற்படிபிடித்து மாதரந்தபொன்னுருவி
மாங்காய்வருகுதென்று வழிபார்த்துக்கொண்டிருந்தாள்
இப்படியாக இவளிருக்கும்வேளையிலே

பொன்னுருவி அனுப்பினதாதிவந்து எங்கும் மாங்காய்
அகப்படவில்லை என்று சொன்னது.

தாய்போல்வளர்த்தெடுத்த தாதியவளோடிவந்தாள்
போதேவருந்தடங்கண் பொன்னுருவிநாயகமே
மாங்காய்க்குப்பட்டகளை போதுமென்றுள்தாதியவள்
தேசம்பதினாறும் திரிந்துவந்தேன்மாங்கனிக்கு
வையகமெல்லாஞ் சுற்றிவந்தேன்மாங்கனிக்கு
எங்கெங்குந்தேடி யினியவிடமாராய்ந்தேன்
மாங்காய்மாமிருக்கும் மாங்காயைக்கண்டதில்லை
தழைந்தமாமிருக்கும் சிறுபிஞ்சுகண்டதில்லை
எந்தனுக்குங்கிட்டாது எலக்கருங்குழலே
என்றுமவளுரைத்து இந்தாரும்பொன்னென்று
கையில்கொடுத்தாளே கட்டழகித்தாதியரும் [ள்
பொற்கொடியும்வாங்கி பெட்டியுள்வைத்துக்கொண்டா
போதேவருந்தடங்கண் பொன்னுருவிநாயகிக்கு
(அந்த)மாதரிளங்கொடிக்கு மசக்கைக்குணமாகி
மாதரிளங்கொடிக்கு மாங்காய்மனதாகி
மாருட்டங்கொண்டு மௌனமாய்த்தானிருப்பாள்
அன்னபானாதி அருந்தாளே ஆரணங்கு
உப்பஞ்சீர்வேண்டாள் உரியில்தயிர்வேண்டாள்
காளாஞ்சிதீண்டாள் கமலம்பூநாயகியும்
முந்தாணிபோட்டு முருகுழலாள்பள்ளிகொள்வாள்
கண்டவிடந்தனிலே காரிழையும்பள்ளிகொள்வாள்
இப்படியாக இவளிருக்கும்வேளையிலே

பொன்னுருவி இரண்டாவது ஒருதாதியை
மாங்கனிக்கு அனுப்பினது,

ஆரணக்குமாதருக்கு ஆயிரம்பேர்தாதியுண்டு
ஆயிரம்பேர்தாதிகளில் அதிலேயொருத்தியவள்
அப்போதுதாதியவள் அன்பாகஎங்கேவாருள்
மாஞ்சோலைதேடியவள் மகிழ்வுடனேவாருளே
எங்கேதான்வாருளவள் எழிலானதாதியவள்
தெற்குத்தெருதாண்டி தேரோடும்வீதிவிட்டு
மாஞ்சோலைக்கருகாக மகிழ்ச்சியுடன்தான்வந்து
கர்ணருடமாஞ்சோலைக்குள் கட்டழகிபோகலுற்ருள்
கர்ணருடமாஞ்சோலை காத்திருக்கும்மன்னர்களில்
அப்பெரியசோலைகாக்கும் ஆயிரம்பேர்மன்னர்களை
ஆயிரம்காவலர்க்கும் அதிகாரியொருவன்
அதிகாரியானவற்கும் ஆரணக்குதாதியற்கும்
மெத்தப்பழக்கமுண்டு வேல்பொருதுமகண்ணுட்கு
ஆனவுறவுமுண்டு அடிநாள்தொடுசுமுண்டு
அந்தவுறவாலே ஆரணக்குதாதியவள்
மாஞ்சோலையுட்புகுந்து மன்னவனைத்தேடிவந்தாள்
தழைத்தமரத்தடியில் தான்பள்ளிகொண்டிருந்தான்
ஆரணக்குதாதியரும் அதிகாரிபின்னேவந்து
உற்றவுறவுகளும் வுறன்முறைக்காரியமும்
மற்றவிசேஷமெல்லாம் மாதவளுந்தான்பேசி
அதிகாரன்பின்னேவந்துதலைபார்த்துகொண்டிருந்தாள்
தலைபார்க்கும்பாவனைபோல் தாதியவளேதுசொல்வாள்
மன்னன்முகம்நோக்கி மாதுஎடுத்துரைப்பாள்
போதேவருந்தடங்கண் பொன்னுருவிநாயகிக்கு
மாதரிளங்கொடிக்கு மசக்கையதிகரித்து
தொண்ணூறுநாளாக அன்னமதுவுண்ணவில்லை
படுக்கைபொருந்தவில்லை பாவையிளங்கொடிக்கு
மாங்காய்நினைவாளுள் மாதரிளங்கொடியும்
உத்தனதுசோலையிலே ஒருமாங்காய்வேண்டுமென்ருள்
அந்தவுரைகேட்டு ஆணழகன்ஏதுசொல்வான்
ஏதோடிதாதிஎன்று யேறமுகம்பார்த்து
கன்னிமுகம்நோக்கிக் காவலனுமேதுசொல்வான்
மெள்ளமெள்ளவந்தாயோ கொள்ளையிடமாங்கனியை[ல்
மாங்காய்என்றுரைத்தசொல்லைமன்னவனுர்தாம்கேட்டா

வாயைக்கிழித்திடுவார் மண்டையுடைத்திடுவார்
எழுந்துநடவுமென்று எகிறித்துரத்தலுற்றான்
இந்தச்சொல்சொன்னமட்டும் இனியிருக்கலாகாது

தாதி கர்ணனுடைய தோட்டத்தில் ஒருமாங்காய்
திருடிவந்து பொன்னுருவிக்குக் கொடுத்தது.

அப்போதுதாதியவள் ஆரணங்குநாயகியாள்
ஓடிவரும்வேகத்திலே ஒருமாங்காய்தான்பறித்தாள்
ஒருமாங்காய்தான்பறித்து உள்மடியில்தான்சொருகி
மாங்கனிச்சோலையைத் தாண்டினாள்மங்கையரும்
போதேவருந்தடங்கண் பொன்னுருவிமாளிசென்றாள்
கைகால்கள்சுத்திசெய்து கட்டழகிவுட்புகுந்து
மாங்காய்கறிசமைக்க மாதுநல்லாளேதுசெய்வாள்
மாலைக்குழலாளும் மாங்காய்நனைத்திருகி
உப்புக்கொருகீத்துக கலந்துபிசறிவைத்தாள்
கடுகுக்கொருகீத்துக் கலந்துபிசறிவைத்தாள்
மாங்காய்க்குவெந்தயங்கள்மயிலணையும்சொப்பனிட்டாள்
பத்துவிதப்பச்சடியும் பதமாய்த்திருத்தினாள்
குழம்புபொரிக்கறியும் கூட்டமுதுதான்சமைத்தாள்
தயிர்சேர்ந்தபச்சடியும் தாளித்தாள்தையலரும்
புளிசேர்ந்தபச்சடியும் செய்தாளேபொற்கொடியும்
அவியல்துவையலது அவித்தாளே ஆரணங்கு
இத்திப்புமாங்கனிகள் திகட்டுப்படிசெய்து
போதேவருந்தடங்கண் பொன்னுருவிமுன்னேவந்து
மாங்காய்கள்வந்ததம்மா மாதரிளங்கொடியே
போசனங்களுண்ணப் பொற்கொடியேவாருமென்றாள்

தாதிகள் பொன்னுருவிக்குப் போசனம்
சமைத்துப்போட்டது.

அந்தவுரைகேட்டு ஆரணங்குபொன்னுருவி
திட்டென்றெழுந்திருந்து சேயிழையுமப்போது
மஞ்சநீர்சாலையிலே மயிலணையும்வந்துநின்று
காலோடுகையும் கனிவாயும்சுத்திசெய்து
மார்போடுதோளும் மதிமுகமுஞ்சுத்திபண்ணி
சிவசிவாவென்று திருநீற்றுக்காப்புமிட்டு
பத்திரம்போட்டு பகவானைக்கைதொழுது

தும்பைமலர்போட்டுச் சூரியனைப்பூசைபண்ணி
சுத்திவளையவந்து செவிதனிலேபூச்சொருகி
அம்மாதுபொன்னுருவி யரண்மனையில்சென்றாள்காண்
அங்குமொருதாதி அறிவுடையாளோடிவந்து
வட்டமணைபோட்டு வண்மையுடன்குந்தவைத்து
வாழையிலைபோட்டு மணிச்சொம்புநீர்தெளித்து
தும்பைமலர்போல சொரிந்தாளேபோசனங்கள்
ஆயிரத்தெட்டுவிதம் சமைத்திருந்தமாங்கனியை
விதவிதமாய்த்தானெடுத்து வட்டித்தாள்மெல்லியற்கு
போதேவருந்தடங்கண் பொன்னுருவிநாயகியாள்
பூரித்திருந்தோளும் பொன்னுப்ராணமன்ன
சந்தோஷப்பட்டு சரீரங்கள்பூரித்து
தொண்ணூறுநாள்களுண்ணாதபோசனத்தை
மாங்காயைத்தான்பார்த்து வாரியமுதுகொண்டாள்
வாரியமுதுகொண்டு வண்ணமுகஞ்சுத்திபண்ணி
கால்கைகள்சுத்திபண்ணி கனிவாயும்கொப்பளித்து
உடைகொண்டுவாய்துடைத்தே உத்தமிபோய்நடந்தாள்
கட்டிலின்மேற்படுத்து களையாறுள்கட்டழகி
தன்னைமறந்தாளே தாமக்கருங்குழலாள்
நினைவுமறந்துமல்லோ நித்திரைசெய்யலுற்றாள்
இப்படியாக யிவளிருக்கும்வேளையிலே

கர்ணர் பொன்னுருவிக்கு மாங்கனி கிடைத்ததோ
இல்லையோவென்கிற சந்தேகந் தெளியும்படி
அவளுடைய மாளிகையில்வந்து
மறைந்திருந்து பார்க்கிறது.

காஞ்சிநாடாளும் கர்ணசிகாமணியும்
மாங்கனிதன்களவைக் காணவென்றுமன்னவனும்
போதேவருந்தடங்கண் பொன்னுருவிமாளிசென்று
பள்ளியறைமண்டபத்தைச் சுற்றியேபார்க்கலுற்றான்
அந்தச்சமயத்தில் ஆரணங்குமாதவளும்
உண்ணாதமாங்கனியைத் திண்ணபடியாலே
காணாதமாங்கனியைக் கண்டபடியாலே
குடலைப்பிரட்டி எடுத்தாளேவாந்தியவள்
அவளெடுத்தவாந்தி அன்பானமாங்கனியை
காஞ்சிநாடாளும் கர்ணராவர்பார்த்து

அன்னிலங்கன்றனும் அப்பட்டிதானேந்தி
வாயிலெடுத்ததெல்லாம் வாங்கினான் தன்கையிலே
வாங்கிநடந்தானே மகாராசன் மாளிகைக்கு
பேடைமயில்கன்றன் பெருந்திருவாள் முன்னேவந்து
ஆரணங்கு ஆச்சியரே அன்னனுடதேவியரே

கர்ணர் பெருந்திருவாளைக்கண்டு பொன்னுருவிக்கு
மாங்காய் கொடுத்தவர் ஆரென்றுகேட்டது.

மாதரிளங்கொடிக்கு மாங்காய்க்கொடுத்தவரார்
ஆர்கொடுத்தார்மாங்கனிகள் ஆச்சியரே நீயுரையும்
கொடுத்தவரைக்கண்டாலே கொல்லத்துணிந்திடுவேன்
ஊருக்குமேற்கே உயிர்க்கழுவில்போட்டிடுவேன்
தாமமணிக்கட்டித் தறித்திடுவேன்பூமுடியை
அந்தவுரைகேட்டு ஆரணங்குமேதுசொல்வாள்

பெருந்திருவாள் நான்கொடுக்கவில்லையென்று
கர்ணருக்குச் சொல்வது.

தேசத்தையாளும் துரியோதனப்பெருமான்
அன்றொருநாள்வேளையிலே அழைத்தந்தக்காவலரை
மாங்காயைக்கொண்டு வரச்சொல்லிமன்னவரும்
கட்டிலின்கீழாகக் கொட்டினார்மாங்கனியை
மாங்கனிக்காகவல்லோ மாதரிளங்கொடியாள்
அவரென்றுஉன்னை எழுப்பினாளாரணங்கு
உந்தன்முகங்கண்டவுடன் ஓடியவள்பதுங்க
மஞ்சநீர்சாலையிலே மாதவளுஞ்சேர்ந்துவிட்டாள்
அன்றுமுதலின்றொருநாள் ஆரணங்குமாதருக்கு
மாங்காய்கள்கொடுத்தறியேன் மாதரிளங்கொடிக்கு
கொடுத்ததேயுண்டானால் கொல்லத்துணிந்துவிடும்
தாமமணிக்கட்டி தறித்துவிடும்பூமுடியை
என்றுமவளுரைத்து இருந்தாளேபெருந்திருவாள்
காஞ்சிநாடாளுங் கர்ணரவர்கேட்டு
மாங்கனிசோலையிலே வந்தார்கர்ணரும்

கர்ணர் தோட்டக்காரரை அழைத்து பொன்னுருவிக்கு
மாங்கனி கொடுத்தவராரென்று கேட்டது.

மாங்கனிக்காவலரை மன்னவனுந்தானழைத்தார்
ஆயிரம்பேர்காவலர்கள் அன்பாகஓடிவந்தார்

கர்ணரடிவணங்கிக் கட்டழகர் திற்கனுற்ருர்
என்னையழைத்தபணி யேதுபணிசொல்லுமென்ருர்
கர்ணரதுகேட்டுக் காவலருக்கேதுசொல்வார்
ஆயிரங்காவலரே ஆணழகா நீங்களெல்லாம்
இப்பெரியசோலையிலே யிருந்தீர்கள்எல்லவரும்
மாஞ்சோலைக்காவல் இருந்தீர்கள்மன்னர்களே
போதேவருந்தடங்கண் பொன்னுருவிநாயகிக்கு
ஆர்கொடுத்தீர்மாங்கா யறியவுரையுமென்ருர்
எவர்கொடுத்தீர்மாங்கா யெனக்கறியச்சொல்லுமென்ருர்

பொன்னுருவியின் தாதி எங்களைக்காணுமல் மாங்காய்ப் பறித்திருக்கவேணுமென்று காவலர்கள் சொன்னது.

என்றவுரைகேட்டு ஏதுசொல்வார்காவலர்கள்
ஐயாவேகேளும் அடியேனெருவார்த்தை
என்னையா நீர்கேளும் எங்களுடவார்த்தை
ஆயிரம்பேர்காவலர்க்கு அதிகாரியானவனும்
மாமரத்தின்கீழாக மன்னவனும்பள்ளிகொண்டான்
போதேவருந்தடங்கண் பொன்னுருவிதாதியவள்
மாதரிளங்கொடியாள் மயில்போல்நடந்துவந்து
தாமமுடியாற்குத் தலைபார்த்துக்கொண்டிருந்தாள்
இருவரும்பேசியல்லோ இனியசண்டைபண்ணுர்கள்
ஒருவற்கொருவருகந்துமேசண்டைபண்ணுர்
சண்டைபண்ணும்வேளையிலே நடந்தாளேதாதியரும்
அதிகாரிதானெழுந்து அடித்துத்துறத்தலுற்ருர்
உற்றபெரும்சோலையிலே ஓடினுள்தாதியரும்
ஓடினஓட்டத்திலே ஒருமாங்காய்கிள்ளினுளோ
கிள்ளிப்பறித்தாளோ கிளிமூக்குமாங்காயை
ஓடிப்பறித்தாளோ வுத்தமியாள்தாதியரும்
தாமக்கருங்குழலாள் தாவிப்பறித்தாளோ
ஏதுமறியோமையா யென்றுசொன்னுர்காவலர்கள்

கர்ணர் பொன்னுருவிவீதியில் காவலரில் ஒருவரைக்கட்டியடித்தது.

காஞ்சிநாடாளும் கருணரதுகேட்டு
உத்தமனுர்காவலற்கு வுள்மர்மந்தானுரைத்து
போதேவருந்தடங்கண் பொன்னுருவிவீதியிலே
கட்டுங்கயிறெடுத்துக் காவலரோவாருமென்ருன்

அடிக்குங்கயிறெடுத்து வாருமென்றான் ஆணழகன்
அந்தவுரைகேட்டு அழகான காவலர்கள்
கட்டும்கயிறுகளும் கையிற்பிரம்புடனே
பிடித்துமக்காவலனைப் பின்கட்டாய்க்கட்டியவர்
கொண்டுவாரார்வீதிவழி கொற்றவர்கள் தான்பார்க்க
போதேவருந்தடங்கண் பொன்னுருவிவீதிவந்து
துன்னிலங்கண்ணார்கள் தொழுமாத்தில்கட்டினார்கள்
மற்றுமுள்ளகாவலனை மர்மமாய்க்கண்காட்டி
கர்ணரவர்கண்காட்ட கண்டந்தக்காவலரும்
கையில்பிரம்பெடுத்துக் காவலர்களேதுசெய்தார்
வீசியடிக்கலுற்றார் மேலானகாவலனை
ஆவிதுடிதுடிக்கத் தாவியடிக்கலுற்றார்
எட்டிமயிர்பிடித்து கட்டியடிக்கலுற்றார்
அடிப்பட்டமன்னவனும் அலறியேகூறலுற்றான்
குய்யோமுறையோவென்று கூச்சலிட்டுக்கூவினான்
அடிபொறுக்கமாட்டாமல் அலறுகிறான்காவலனும்
இப்படியாக இருக்கின்றவேளையிலே
மாங்காய்கொடுத்த காவலனை கர்ணர் அடிப்பதாலதை
நிறுத்த தாதி பொன்னுருவியிடத்தில் சொன்னது.
போதேவருந்தடங்கண் பொன்னுருவிதாதியரும்
மாங்காய்த்திருடிவந்த மாலைக்கருங்குழலும்
போதேவருந்தடங்கண் பொன்னுருவிமுன்னேவந்து
மாங்காய்கொடுத்ததொரு மன்னவனும்மாளுகிறான்
கர்ணருடகையாலே கைலாசம்சேருகிறான்
மாங்காய்க்குத்தன்னாலே மாளவோமன்னவனும்
மாங்கனிக்குத்தன்னாலே சாகவோமன்னவனும்
காஞ்சிநாடாளும் கர்ணர்பெருமாளுக்கு
மூத்தானவாய்திறந்து விஸ்தாரம்சொன்னாலே
காஞ்சிநாடாளும் கர்ணர்மனம்பொறுத்து
அடியைவிலக்குவார் ஆனந்தவாழ்மாரி
என்றுமவளுரைக்க ஏதுசொல்வாள்பொன்னுருவி
பொன்னுருவி தன்னிடத்தில்வந்து சொல்லிக்கொண்ட
தாதியின் இஷ்டப்படி மனவருத்தத்துடன்
சொல்லி யனுப்புகிறது.
தாதிமுகம்நோக்கித் தார்குழலாளேதுசொல்வாள்
பிள்ளைபெறவேணுமென்று பெரியதவஞ்செய்தேனே

மைந்தன்பெறவேணுமென்று மாதவங்கள்செய்தேனே
போதுமடியெந்தனுக்கு புத்திரனுய்வந்தகொள்ளை
என்றுமனஞ்சலித்து ஏதுசொல்வாள்பொன்னுருவி
தாமக்கருங்குழலே தாதியரே நீகேளும்
காஞ்சிநாடாளும் கர்ணருகிற்சென்று
மாங்காயளவெடுத்து மாங்கனிபோல்பொன்னெடுத்து
கர்ணருடகைதலத்தில் கட்டழகிநீகொடுத்து
காஞ்சிநாடாளும் கர்ணருக்குத்தெண்டனிட்டு
போதேவருந்தடங்கண் பொன்னுருவிநாகியாள்
அடிவிலக்கச்சொன்ஞுளென்று அவருக்குரையுமென்ருள்
நானுரைத்தபாவனையாய் நீயுரைத்துவாருமென்ருள்
அவ்வார்த்தைதான்கேட்டு ஆரணங்குதாதியரும்

தாதி பொன்னுருவிகொடுத்த பொன்மாங்கனி கர்ண
ரிடத்திற் கொண்டுபோய்க்கொடுத்து அடியை
நிறுத்தச்சொன்னது.

போருளவள்தாதி பொன்னுபரணமின்ன
பொற்பிரப்பங்கோல்பிடித்து போருளவள்தாதி
காஞ்சிநாடாளும் கர்ணருக்குமுன்னேவந்து
முக்கால்வலம்வந்து முடிவணங்கித்தெண்டனிட்டாள்
நாற்கால்வலம்வந்து நமஸ்கரித்துத்தெண்டனிட்டாள்
ஐங்கால்வலம்வந்து அடிவணங்கித்தெண்டனிட்டாள்
காஞ்சிநாடாளும் கர்ணரவர்பார்த்து
அடிநிறுத்துமென்றுசொல்ல ஆணழகரேதுசொல்வார்
(நீ) ஆர்பெண்ணேதாதி அறியவுரையுமென்ருர்
அப்போதுதாதி ஆரணங்குஏதுசொல்வாள்
ஆர்பணியுமல்ல அடியேன்றிருப்பணிதான்
எவர்பணியுமல்ல எம்பெருமான்திருப்பணிதான்
பொன்னுருவிநாயகியாள் பூவையுடதாதியென்ருள்
போதேவருந்தடங்கண் பொன்னுருவிதாதியென்ருள்
காஞ்சிநாடாளும் கர்ணரவர்கேட்டு
(நீ) இங்குவந்தகாரணத்தை எனக்கறியக்கூறுமென்ருர்
அப்போதுதாதி ஆரணங்குஏதுசொல்வாள்
மாங்காயளவாக கொடுத்ததொருபொன்னெடுத்து
கர்ணருக்குமுன்னேவைத்து கட்டழகியேதுசொல்வாள்

அடியைவிலக்குமென்று ஆரணங்குதெண்டனிட்டாள்
அந்தவுரைகேட்டு ஆணழகரோதுசொல்வார்
எங்களரண்மனையி லிருந்ததொருபொன்னையெல்லாம்
திருடிவந்துபொன்னுருவிதான்கொடுத்தாளெந்தனுக்கு
எங்களுடமையது எந்தன்கையில்சேர்ந்ததுகாண்

கர்ணர் பொன்னுருவி தாதிகொண்டுவந்த பொன் மாங்கனியைப் பறித்துக்கொண்டு மறுபடியுங் காவலனை அடிக்கச்சொன்னது.

(இன்னெங்)கட்டியடியுமென்றான் காவலனார்வீரியரும்
கர்ணருரைகேட்டுக் காவலர்களப்போது
வீசியடிக்கலுற்றார் வேல்பொருதுங்கண்ணனை
எட்டிமயிர்பிடித்து கட்டியடித்தார்கள்
மூத்தந்தவாழ்மார்பர் மோதியடிக்கலுற்றார்
அடிபொறுக்கமாட்டாமல் அலறுகிறான்காவலனும்
ஆவிதுடிதுடிக்க அடிக்கலுற்றார்வீரியரும்
அழுதகுரலானால் அல்லோகம்கேட்டுதங்கே
கூவுகிறகூச்சலென்றால் கொற்றவற்குக்காதடைக்கும்

கர்ணர் பொன்மாங்கனியைப் பறித்துக்கொண்டு காவலனை அடிப்பதில் தயையின்றி தன்னைத் துறத்தியதை தாதி பொன்னுருவியிடம்வந்து சொன்னது.

அப்பெரியக்கூச்சல்கேட்டு ஆரணங்குதாதியரும்
மனதுபொறுக்காமல் வாறாளேதாதியரும்
ஆங்காரந்தன்னுடனே ஆணழகிவாறாளே
போதேவருந்தடங்கண்பொன்னுருவிமுன்னேவந்தாள்
ஆங்காரந்தன்னுடனே அடிவணங்கித்தெண்டனிட்டா
தெண்டனிட்டதாதி திரும்பஎழுந்திருந்து
மோதிரமின்ன முடிமேலேகைதொழுதாள்
போதேவருந்தடங்கண் பொன்னுருவியேதுசொல்வாள்
போனதொருகாரியங்கள்புதுமைகளைசொல்லுமென்றாள்
அப்போதுதாதியவள் ஆரணங்குஎதுசொல்வாள்
மாங்காயளவாக நீகொடுத்தபொன்னெடுத்து
கர்ணருக்குமுன்னே வைத்து காலில்விழுந்தேனே
அடியைவிலக்குமென்று அடிவணங்கிதெண்டனிட்டேன்
காஞ்சிநாடாளும் கர்ணரவர்பார்த்து
எங்களுடமையது எனக்குவந்துசேர்ந்ததென்று

(இன்னம்)கட்டியடியுமென்றார் காவலனார்வீரியனை
பார்த்துவயிறெரிந்து பதறிநடந்துவந்தேன்
கண்டுவயிறெரிந்து காணவந்தேன்உந்தனிடம்
என்னவுபாயமது ஏதுசெய்வோமாச்சிஎன்றாள்

மறுபடியும் கர்ணர் காவலரை அடிப்பதால் அதை
திருத்த பொன்னுருவி தன் ஆபரணமுதல் எது
வேண்டினாலுந் தருகிறேனென்று தாதியுடன்
சொல்லி அனுப்பினது.

போதேவருந்தடங்கண் பொன்னுருவிதான்கேட்டு
தாதிமுகம்நோக்கித் தையலருமேதுசொல்வாள்
காஞ்சிநாடாளும் கர்ணருகிற்சென்று
ஏதேதுகேட்டாலும் இளங்கொடியாள்தாரேனென்றாள்
அடியைவிலக்கச்சொல்லி ஆரணங்குகேளுமென்றாள்
(அவர்)என்னுடமைகேட்டாலும் ஏதேதுகேட்டாலும்
எந்தனுடமையது அடங்கலுங்கேட்டாலும்
அத்தனையுந்தாரேனென்று அவருக்குத்தெண்டனிட்டு
அடியைவிலக்கிவாரும் ஆரணங்குதாதியென்றாள்
அந்தவுரைகேட்டு ஆரணங்குதாதியவள்
வாராளவள்தாதி வளம்பெரியவீதியிலே
காஞ்சிநாடாளும் கர்ணரெதிரேவந்து
மூக்கால்வலம்வந்து முடிவணங்கித்தெண்டனிட்டாள்
நாற்கால்வலம்வந்து நமஸ்கரித்துத்தெண்டனிட்டாள்
தெண்டனிட்டதாதி திரும்பஎழுந்திருந்து
மோதிரமின்ன முடிமேலேகைதொழுதாள்
காஞ்சிநாடாளும் கர்ணரவர்பார்த்து
அடியைதிருத்துமென்று ஆணழகரேதுரைப்பார்
(நீ) யாருடையதாதி அறியவுரையுமென்றார்
எவருடையதாதி எனக்கறியக்கூறுமென்றார்
அப்போதுதாதி அடிவணங்கிஏதுசொல்வாள்
ஆர்பணியுமல்ல அடியேன்திருப்பணிதான்
பேர்பணியுமல்ல பெருமாள்திருப்பணிதான்
பொன்னுருவிதாதியென்ன பொன்னடிக்குத்தெண்டனிட
காஞ்சிநாடாளும் கர்ணரெடுத்துரைப்பார்
இங்கேநீவந்தவகை எனக்கறியக்கூறுமென்றான்
கட்டழகிதாதியவள் கர்ணருக்குஏதுசொல்வாள்

போதேவருந்தடங்கண் பொன்னுருவிநாயகியாள்
உங்களுக்குச்சொல்லுமென்று உத்திரவுசொன்னாளே
பொன்னாபரணமெல்லாம் பொற்கொடியாள்தான்கழற்றி
இந்தவுடமைஎல்லாம் இளங்கொடியாள்தான்கழற்றி
அத்தனையும்உங்களுக்கு ஆரணங்குதாரேனென்றாள்
அடியைவிலக்குமென்றாள் ஆரணங்குபொன்னுருவி
அந்தவுரைகேட்டு ஆணலழகுமன்னன்
கர்ணர்பொன்னுருவி ஆபரணமெல்லாங்கொண்டுவந்து
கொடுத்தால் அடியை நிறுத்துகிறேனென்று
தாதிக்குச் சொன்னது.
போதேவருந்தடங்கண் பொன்னுருவிநாயகியாள்
அவளுடமைஅத்தனையும் ஆரணங்கேவாங்கிவந்தால்
அடியைவிலக்கிடுவேன் ஆரணங்கேஎன்றுரைத்தார்
அந்தஉரைகேட்டு ஆரணங்குதாதியரும்
ஓட்டம்பெருநடையாய் ஓடிவந்தாள்தாதியரும்
போதேவருந்தடங்கண் பொன்னுருவிமாளிசென்றாள்
கர்ணனுடதேவியவள் கட்டழகிமாதருக்கு
தாய்போல்வளர்த்தெடுத்ததாதிவந்துதெண்டனிட்டாள்
போதேவருந்தடங்கண் பொன்னுருவிநாயகியாள்
தாதிமுகம்நோக்கி தையலருமேதுசொல்வாள்
போனதொருகாரியங்கள்புதுமையென்னசொல்லுமென
சொன்னதொருகாரியங்கள் சீக்கிரமாய்சொல்லுமென்று
தையல்முகம்நோக்கி தாதியருமேதுசொல்வாள் [ள்
இட்டஉடமை அடங்கலுந்தந்தாக்கால்
அடியைவிலக்கிடுவேன் என்றுரைத்தார்ஆணழகன்
போதேவருந்தடங்கண் பொன்னுருவிதான்கேட்டு
(அவள்)இட்டஉடமைஎல்லாம்ஏந்திழையுந்தான்கழற்றி
தக்கஉடமைஎல்லாம் தான்கழற்றித்தையலரும்
அத்தனையும்மூட்டைகட்டி ஆரணங்குகைக்கொடுத்தாள்
எடுத்துநடந்தாளே எலக்கருங்குழலாள்
எட்டடியும்ஓரடியாய் எட்டியவள்நடந்து
பத்தடியும்ஓரடியாய் பதறிநடந்தாளே
பொன்னுருவி தாதியிடமனுப்பிய ஆபரணமெல்லாம்
கர்ணர்வாங்கிக்கொண்டு பின்னும் அடிக்கச்சொன்னது.
காஞ்சிநாடாளும் கர்ணருக்குமுன்னேவந்து
பணிமுகந்துமுன்னேவந்து பார்வையருந்தெண்டனிட

தங்கஉடமைகொண்டு தையலருமுன்னேவந்தாள்
வந்துபணிந்தவளைக் கண்டுமனமகிழ்ந்து
கொண்டுவந்தபொன்னுடமை கொற்றவனுர்தான்வாங்கி
காஞ்சிநாடாளுங் கர்ணரெடுத்துரைப்பார் [ண்
நான்போட்டஉடமையெல்லாம் எந்தனுக்குவந்ததுகா
பொற்கொடியாள்தந்தாளே போட்டஉடமைஎல்லாம்
இன்னமடியுமென்ருர் கர்ணர்பெருமாளும்
கட்டியடியுமென்ருர் கர்ணர்பெருமாளும்
அப்படிக்கேகட்டி யடித்தார்கள்காவலர்கள்
தாதியவள்பார்த்து தையலருமேதுசொல்வாள்
கர்ணர்முகம்நோக்கிக் கட்டழகிசொல்லுகிருள்
போதேவருந்தடங்கண் பொன்னுருவிநாயகரும்
என்னென்னதந்தாலும் என்னுதுஎன்றீரே
மாதாந்தபொன்னுருவி மனதுகளையுருளே
என்னுபணிவிடைகள் செய்தால்விடுவீர்கள்
எதுசெய்தால்விடுவீர்கள் தெரிந்திடசொல்லுமென்ருள்
காஞ்சிநாடாளுங் கர்ணரதுகேட்டு
தாதிமுகம்நோக்கி தார்வேந்தரேதுசொல்வார்
போதேவருந்தடங்கண் பொன்னுருவிநாயகிக்கு
இருக்கின்றஆஸ்தியெல்லாம் எந்தனுக்குத்தந்தாலே
அடியைநிறுத்திவைப்பேன் ஆாணங்குதாதியென்ருன்

தாதி மறுபடியும்போய் கர்ணர் உன்னுடைய ஆஸ்தி
எல்லாம் கொடுத்தால் அடியை நிறுத்துகிறேன்
என்றுசொல்ல பொன்னுருவி ஆபரணங்
கொடுத்தனுப்பியது.

அந்தஉரைகேட்டு ஆரணங்குதாதியரும்
ஓட்டம்நடையுமாய் ஓடிவந்தாள்தாதியரும்
போதேவருந்தடங்கண் பொன்னுருவிமுன்னேவந்து
தாமக்குழலாளும் தாதியவள்தெண்டனிட்டாள்
போதேவருந்தடங்கண் பொன்னுருவிநாயகியும்
போனதொருகாரியங்கள் புதுமைகளைசொல்லுமென்ரு
அந்தவுரைகேட்டு தாதியருமேதுசொல்வாள் [ள்
(நீ)கொடுத்தஉடமைஎல்லாம்கொண்டுபோய்நான்கொடு
அத்தனையும்வாங்கினர் ஆணழ்கர்கர்ணரவர் [த்தேன்
வாங்கியவருள்ளேவைத்து மகாாசனேதுசொல்வார்
நானிட்டஉடமைஎல்லாம் எந்தனுக்குவந்ததோடி

(இன்னம்)காரிழையாள் கைதனிலே இருக்குமுடமைஎல்
ஆணழகிமாளிகையும் அவளுடைய ஆஸ்தியையும்[லாம்
அத்தனையும்கொடுத்தால் அடிமையிலக்குவேனுன்
அந்தவுரைகேட்டு ஆணழகிபொன்னுருவி
தங்கஉடமைகளும் தங்கத்தால்பெட்டிகளும்
பொன்னால்உடமைகளும் பொற்பெட்டிரத்தினமும்
எட்டுக்கால்கட்டில்களும் இருக்கின்றபூஷணமும்
தங்கத்தால்காணிகளும் தனக்குள்ளபூஷணமும்
ஆரணங்குவாசம்பண்ணும் அவளுடையமாளிகையும்
மயிலனையாள்வாசம்பண்ணும் மண்டபமும்உப்பரியும்
அம்மாமார்தான்கொடுத்த அழகானமாளிகையும்
மாமன்மார்தான்கொடுத்த மண்டபமும்கோபுரமும்
மஞ்சளுக்குவிட்டதொரு வளம்பெரியகாணிகளும்
இஞ்சிக்குவிட்டதொரு எலுமிச்சந்தோப்புகளும்
வெத்திலைக்குவிட்டதொரு விஸ்தாரத்தோப்புகளும்
தேங்காய்பறித்துண்ணும் தென்னமரத்தோப்புகளும்
இத்தனையுந்தானெழுதி ஏலங்கருங்குழலாள்
கனமுடையபஓலையிலே கையெழுத்தும்தான்போட்டு
மகாராசர்கர்ணருக்குத் தெண்டனிட்டேனென்றுசொல்லி
தெண்டனிட்டேனென்றுசொல்லி தேவருக்குதீயுரைத்
ஓலையைக்கொண்டு கொடுமென்றாள்உத்தமியும் [து
அவ்வோலைதான்வாங்கி ஆரணங்குதாதியரும்

தாதி பொன்னுருவிகொடுத்த ஆபரணமும் ஓலைச்
சுருளையுங் கர்ணரிடத்திற் கொடுத்தது.

எட்டடியும்ஓரடியாய் விட்டுவிகநடந்து
பத்தடியும்ஓரடியாய் பதறியவள்நடந்து
காஞ்சிநாடாளுங் கர்ணருக்கெதிரேவந்து [ள்
பட்டோலைமுன்னேவைத்து பாங்கியுந்தெண்டனிட்டா
கையோலைமுன்னேவைத்து கட்டழகிதெண்டனிட்டாள்
காஞ்சிநாடாளுங் கர்ணரவர்பார்த்து
ஓலையைத்தானெடுத்து வாசித்தார்உத்தமனும்
குஞ்சிரிப்புகொண்டு குலுங்கநகைநகைத்து
உடம்புகுலுங்கிடவே உத்தமருந்தான்நகைத்து
தூதிமுகம்நோக்கித் தார்வேந்தரேதுசொல்வார்

பொன் னுருவி தாதிவசங்கொடுத்தனுப்பிய
ஆபரணமெல்லாங் கர்ணர் பெற்றுக்
கொண்டு மறுபடியும் காவலரை
கட்டி அடிக்கச்சொன்னது.

(நாங்கள்) இட்டஉடமைகளும் ஏழுபரிமண்டபமும்
மஞ்சளுக்குவிட்ட வளம்பெரியசோலைகளும்
அத்தனையும்எங்களது ஆரணங்குதாதியரே
எங்களுடமையெல்லாம் எங்களுக்குவந்ததடி
மன்னவனுர்சேவகரை வாரியடியுமென்றார்
காவலனுர்வீரியரைக் கட்டியடியுமென்றார்
அந்தவுரைகேட்டு அங்கிருந்தசேவகர்கள்
கட்டியடித்தாரே கனகமுடிசேவகரும்
வீசியடித்தாரே வேல்பொருதுங்கண்ணனை
மயிரைப்பிடித்தடித்தார் மாஞ்சோலைக்காவலனை
அடித்தஅடியாலே அலறுகிருன்மன்னவனும்

பொன்னுருவியால் அனுப்பப்பட்ட
தாதி கர்ணர்செய்வதைப்பொறுக்
காமல் மனவருத்தத்துடன்
அவரைக்கேட்டுக்கொள்வது.

அப்போதுதாதியவ ளாரணங்குமேதுசொல்வாள்
காஞ்சிநாடாளும் கர்ணருக்குமுன்னேவந்து
வண்ணமுடிவணங்கி மாதவளுந்தெண்டனிட்டு
ஐயாவே நீர்கேளும் அடியேனொருவார்த்தை
என்னையா நீர்கேளும் இன்னமொருவார்த்தை
போதேவருந்தடங்கண் பொன்னுருவிநாயகியாள்
(அந்த) மங்கையிருக்குமிடம் மன்னு நீவந்ததுவும்
கமலப்பூநாயகியைக் கட்டியணைந்ததுவும்
மாதரிளங்கொடிக்கு மைந்தனுண்டானதுவும்
மசக்கைபெரிதாகி மாங்கனிகள்கேட்டதுவும்
மன்னுவுன்தோட்டத்திலே மாதுநான்வந்ததுவும்
ஒருமாங்காய்நான்பறித்து உத்தமிக்குச்சென்றதுவும்
மாதற்குநான்கொடுக்க மாந்தோப்புகாவலரை
மாறியடிப்பதாலே வைகுண்டஞ்சேருவதும்
அடிபொறுக்கமாட்டாதே அவலோகஞ்சேருவதும்

போதுமையாளந்தனுக்கு மாங்காய்பறித்தகொள்ளை
இன்னமென்னகொடுத்தால் இனிவிடுவீர்மன்னவரே
விருப்பமெதுகொடுத்தால் விடுவீர்காண்மன்னவரே
அந்தஉரைகேட்டு ஆணழகர்கர்ணரவர்

கர்ணர் தாதியைப்பார்த்து பொன்னுருவி
எனக்குப் போசனஞ்செய்து
போட்டால் அடியை
நிறுத்துகிறேனென்றது.

(நீ) கொடுப்பதும்வாங்குவதும் ஏற்காதுஎந்தனுக்கு
தருவதுவும்வாங்குவதும் தையலரேமாளாது [ப்பேன்
(நீ) கொடுத்தஉடமையெலாம் கொம்பனைக்குநான்கொடு
(அவள்)தந்தஉடமையெலாம்தருவேன்காண்தையலற்கு
அவளுடையகையாலே அடிசில்சமைக்கவேணும்
தேசத்தையாளும் துரியோதனராஜருக்கும்
பேடைமயில்கண்ணாள் பெருந்திருவாள்நாயகிக்கும்
தோகைமயிலனையாள் துச்சடையாள்நாயகிக்கும்
எந்தனையுங்கூட உடனகப்பந்திவைத்து
அவளுடையகையாலே அடிசிலிடவேணும்
(நாங்கள்)போசனமுண்டபின்பு பொற்கொடிமாதுகன்னி
காச்சாக்களிப்பாக்கும் கம்மாறுவெற்றிலையும்
எங்களுக்குத்தான்கொடுக்க வேணுங்காண்மாதுகன்னி
அன்றுஇரவில் அவளிடத்தில்நானிருந்து
கட்டியணைத்து கலந்துவிளையாடவேணும்
இதுகளுக்கெல்லாம் இசைந்தாளேயாமானல்
தோகையவள்வாயாலே சொன்னாலுமாகாது
கையாலெழுதித் தாவேணுங்கட்டழகி
அப்படிக்குத்தந்தாலே அடியைவிலக்கிடுவேன்
என்றுமவருரைக்கத் தாதியதுகேட்டு
வீசிநடந்தாளே விசையுடனேதாதியரும்
அவ்வீதிவிட்டு அன்புடனேதாண்டியவள்
போதேவருந்தடங்கண் பொன்னுருவிமுன்னேவந்து
தாமக்குழலாளுந் தாதியவள்தெண்டனிட்டாள்
போதேவருந்தடங்கண் பொன்னுருவியேதுசெய்தாள்
போனதொருகாரியங்கள்புதுமைஎன்னசெப்புமென்றாள்
சென்றதோர்காரியச் சேதியென்னசொல்லுமென்றாள்

உன்கையால் கர்ணருக்குப் போசனஞ் சமைத்துப்
போட்டால் அடியை நிறுத்துவேனென்று
கர்ணர் சொன்னதை தாதி பொன்னுருவி
யிடம் வந்து சொன்னது.

அந்தவுரைகேட்டு அத்தாதியேதுசொல்வாள்
காஞ்சிநாடாளுங் கர்ணருக்குத்தெண்டனிட்டு
கொடுத்தஉடமை அடங்கலும்நான்கொடுத்தேன்
விட்டுவிடவேணுமென வேந்தருக்குதெண்டனிட்டேன்
அத்தனையுந்தான்வாங்கி அவருதென்றுதானுரைத்தார்
மற்றுமுரையது கேட்டேனம்மாமன்னவரை
அடிசில்சமைக்கணுமாம் அவர்களுக்குப்போடணுமாம்
கர்ணமகாராசருன்னைக் கட்டியணையணுமாம்
கட்டியணைந்து கலந்துவிளையாடணுமாம்
அப்படிக்கேநல்லதென்று ஆணங்கேநீயுரைத்து
வாயாலேசொன்னால் மாளாதாம்மன்னவற்கு
கையாலெழுதித் தந்தாலேசம்மதிப்பார்
அப்படிக்குச்செய்தாலே அடியைநிறுத்திடுவார்

கர்ணருக்கு பொன்னுருவி ஓலை எழுதுவதைக்குறித்து
தாதியின்பேரில் விசனப்படுகிறது.

என்றஉரைகேட்டு ஏதுசொல்வாள்பொன்னுருவி
(நீ) தாதியொருத்தி தாமழிப்பாயென்றறியேன்
மோப்பியொருத்தி மூனைகுலைப்பாயென்றறியேன்
கட்டழகிதொந்துமவள் காரிழையாளேதுசொல்வாள்
ஓலைஎடுத்தந்த உத்தமியாள்தானெழுந்து
இழிகுலத்தானென்று தீண்டாமல்நானிருந்தேன்
சாதிகெட்டானென்றுசொல்லி சலிப்பாகநானிருந்தேன்
தேர்ப்பாகனென்றல்லவோ தீண்டாதேநானிருந்தேன்
(அடி) மங்கையரேஎந்தனுக்கு மசக்கைக்குணமாகி
மசக்கைபெரிதாகி மாங்காய்மனதாகி
மாங்காயாலல்லவோ வந்துமுகம்பார்க்கிறது
வர்ணமுகம்பார்க்கிறது வாவென்றழைக்கிறது
இப்படிக்கிருந்ததோ ஈஸ்வரனார்தன்செயலும்
கடவுள்செயலோவென்று கலங்கியழுகலுற்றாள்

தேம்பியழுகலுற்ருள் தெய்வத்தைத்தானினைந்து
அப்படிக்குத்தானழுக அங்கிருந்ததாதியவள்

பொன்னுருவி விசனப்படுவதைப் பார்த்து
தாதிகள் தைரியஞ்சொல்லுவது.

அங்கிருந்ததாதியர்கள் அரிவையர்களேதுசொல்வார்
ஆனைகட்டிவாழ்ந்தாலும் ஆரணங்கேஎன்னுச்சி
குதிரைகட்டிவாழ்ந்தாலும் கொற்றூர்குழலியரே
பல்லக்கிலேறி வாழ்ந்தாலும்பைங்கிளியே
கொண்டான்பெருமையது வேணுமம்மாகொம்பனையே
தாலிப்பெருமையது வேணுமம்மாதார்குழலே
மைந்தன்பெருமையது வேணுமம்மாமங்கையரே
ஆர்வீடுஆர்வீடு ஆச்சியரேஆர்வீடு
ஆளனுக்குநீபணிந்தா லதனலேகுற்றமில்லை
பத்தாவைநீபணிந்தால் பழுதொன்றும்வாராது
கொண்டவனைநீபணிந்தால் குற்றங்கள்வாராது
அடிசில்சமைப்பேனென்று ஆரணங்கேநீஎழுது
போசனஞ்செய்யவல்லோ வாருமென்று நீஎழுது
(இப்படி) எழுதியனுப்பினுல் இறங்கும்அவர்மனது
மனமிறங்கிமன்னவனும் மற்றும்பிழைபொறுப்பார்
மாங்காய்கொடுத்ததொரு மன்னவரைவிட்டிடுவார்

பொன்னுருவி தாதிகள் தைரியஞ்சொன்னதின்
பேரில் மனந்தெளிந்து தாளிப்பனையோலை
எடுத்து கர்ணருக்கெழுதி தாதிவசங்
கொடுத்தனுப்பியது.

அந்தவுரைகேட்டு ஆரணங்குபொன்னுருவி
தாளிப்பனையோலை வாரித்தலைவரிந்து
வெள்ளிப்பனையோலை இருபுரமுந்தான்சீவி
செம்பொனெழுத்தாணிகொண்டு சிராகக்கைபிடித்து
விக்கினரைவேண்டி விநாயகரைத்தான்தொழுது
கணபதியைவேண்டி கைதொழுதுதெண்டனிட்டு
காஞ்சிநாடாளும் கர்ணர்பெருமானே
அடிக்கீழ்முடிசாய்த்தேன் அருங்கிளியாள்பொன்னுருவி
நான்-செய்தபெருங்குற்றமதை தேவரீர்தான்பொறுத்து
குற்றங்கள்செய்தாலுங் குணமாகக்கொண்டணைத்து

மனதுபெரிதுகந்து மன்னவனே நீவிலக்கி
எனக்காகவேபொறுத்து இவ்வடியை நீர்விலக்கும்
அப்படியென்றுசொல்லி எழுதினாள் ஓலையிலே
ஓலையெழுதியல்லோ முத்தரிக்கந்தான்போட்டு
தங்கச்சுருளோலை தாதிகையில்தான்கொடுத்தாள்
தாதியவளப்பொழுது தன்கையில்தான்வாங்கி
பொன்னோலைகைபிடித்து போறாளவள்தாதி
காஞ்சிநாடாளுங் கர்ணரெதிரேவந்து
ஓலைச்சுருளைவைத்து உத்தமியாள்தெண்டனிட்டாள்

தாதிகொண்டுவந்த ஓலையை கர்ணர்வாசித்து
காவலனை கட்டவிழ்க்கச்சொன்னது.

காஞ்சிநாடாளும் கர்ணரவர்பார்த்து
ஓலைச்சுருளெடுத்து உத்தமனார்வாசித்து
கட்டழகிவார்த்தைகொண்டு கர்ணர்மனங்குளிர்ந்து
ஆள்பெருஞ்சேவகரை ஆணழகர்தானழைத்து
கட்டையவிழுமென்றார் காவலர்கள்வீரியரை
கட்டையவிழ்த்தார்கள் காவலனார்வீரியரும்
நுட்பம்உடையவனை நோகாதடித்தார்கள்
ஓயாதழுதவனும் உடனேவெளியானான்
காஞ்சிநாடாளுங் கர்ணரெழுந்திருந்து
அவர்-எட்டநடந்தாரே எதிரொளிக்குஞ்சூரியன்போல்
சாஞ்சிநடந்தாரே சந்திரனொளிபோலே
மாநகரமாளும் மகராசன்மாளிசென்றார்
தேசத்தையாளுந் துரியோதரனும்
போடைமயில்கண்ணாள் பெருந்திருவாள் நாயகமும்
தோகைமயிலணையாள் துற்சடைப்பூநாயகமும்
எல்லவரும்ஒன்றாக வீற்றிருக்கும்வேளையிலே

கர்ணர் காவலனை கட்டவிழ்த்துப்போட்டுதன்வீடுவந்து
துரியோதனன் பெருந்திருவாள் துற்சடையாள்
இம்மூவரையும் தன்னோடு கூடவந்து
பொன்னுருவி யிடத்திற்குப்போய்
போசனஞ்செய்ய அழைத்தது.

காஞ்சிநாடாளுங் கர்ணரவராங்கேவந்து
இருக்கின்றபேர்களுக்கு ஏதுசொல்வார்கர்ணரவர்

போதேவருந்தடங்கண் பொன்னுருவிமாளிகையில்
விருந்துக்குதானழைத்தான்வேல்பொருதிங்கண்ணனும்
அவன்-அழைத்ததினாலேநா மனைவரும்போகவேணும்
இன்றைக்குமத்தியான மெல்லவரும்தானிருந்து
விருந்துபொசிப்பதற்கு வாருங்கோளென்றுசொன்னான்
அந்தவுரைகேட்டு அவர்களெடுத்துரைப்பார்
ஏதுகாண்மன்னவரே இறங்கினாளோபொன்னுருவி
நாடுஞ்செழிக்கவோ நாமுஞ்சுகப்படவோ
சந்தோஷப்பட்டு சரீரங்கள்பூரித்தார்
வருகிறோமென்றுசொல்லி மன்னவர்கள்தானிருந்தார்
இப்படியாக இவரிருக்கும்வேளையிலே

பொன்னுருவி கர்ணருக்குச் சமையல்செய்தது.

போதேவருந்தடங்கண் பொன்னுருவிநாயகியாள்
ஆக்குமடப்பளியை அலகிட்டுத்தாள்திறந்து
கோட்டைமடப்பளியை குச்சிட்டுத்தாள்திறந்து
சாந்தால்தரைமெழுகிச் சந்தனத்தாற்கோலமிட்டு
குங்குமத்தாலே குளிரச்சுவர்பூசி
ஆச்சாவுந்தேக்கும் அரசும்பிளந்தடுக்கி
நெட்டென்றகல்லை நெரித்துநெருப்பாக்கி
தென்கடலுமாணிக்கம் திரட்டிஉமிசேர்த்து
வடகடலுமாணிக்கம் வாரிஉமிசேர்த்து
பெருநெருப்பைமூட்டி பெண்கொடியாளேதுசெய்வாள்
பானைகழுவி பன்னீருலைவார்த்து
அசியானைச்செந்நெல்லை ஆத்திமணல்பொறுக்கி
குசியானைச்செந்நெல்லை தூத்திமணல்பொறுக்கி
பன்னீருலைவார்த்து பதமாகவைத்தாளே
அரிசியைதீட்டியே அன்பாகத்தான்போட்டு
பதம்பார்த்துதான்வடித்தாள் பைங்கிளியாள்கையாலே
வாழைக்காய்கொய்து வழுதலங்காய்காம்பரிந்தாள்
பாவக்காய்கொய்து பயத்தங்காய்காம்பரிந்து
சோலைப்பலாக்காய் சுளைசுளையாய்க்கொய்திடுவாள்
ஈரப்பலாக்காய் இளமுள்ளுகொய்திடுவாள்
நல்லவெல்லம்பூசினிக்காய் கொய்வாள்புளிப்பிடுவாள்
உப்பூரபுளியூர உகத்துமிகப்பொருத்த
தாளித்திறக்கினாள் சமைத்தபதார்த்தமெல்லாம்

நெய்காச்சியாற்றினள் பொன்னுருவிபூமுடியாள்
பால்காச்சியாற்றினள் பங்கயஞ்சீர்தண்ணாளும்
தாதியரைத்தானழைத்து தையலருமேதுசொல்வாள்
அடிசில்சமைத்தேனடி அழையுமவரையென்றாள்

பொன்னுருவி தாதியை யழைத்து கர்ணரிடத்திற்
போய் சமையல்செய்து முடிந்ததென்று
அவரை யழைத்துவரச் சொன்னது.

அந்தஉரைகேட்டு ஆரணங்குதாதியவள்
சந்தோஷப்பட்டு தானடந்தாள்வீதியிலே
தேரோடும்வீதி தெருவும்பலதாண்டி
சித்திராவீதி தெருவும்பலதாண்டி
கடையுங்கடைத்தெருவும் கருமாரவீதிவிட்டு
மாநகரமாளும் மகாராசன்மாளிசென்றாள்
தேசத்தையாளும் துரியோதனன்முன்னேவந்து
அடிவணங்கிதெண்டனிட்டு தாதியவளேதுசொல்வாள்
போதேவருந்தடங்கண் பொன்னுருவிநாயகியாள்
ஆனந்தவாழ்மாரி அடிசில்சமைத்தாள்காண்
அமுதுண்ணவாருமென் றடிவணங்கிதெண்டனிட்டாள்

தாதி போசனத்துக்கழைக்க கர்ணர் துரியோதனன்
துற்சனையாள் பெருந்திருவாள் பந்து
சனங்கள் இவர்கள் எல்லாரும்
பொன்னுருவி வீட்டுக்கு
விருந்துண்ணவருகிறது.

அந்தஉரைகேட்டு ஆனந்தமாயெழுந்தார்
கைகாலலம்பி கனிவாயைச்சுத்திபண்ணி
வாயோடுபல்லும் மதிமுகமும்சுத்திபண்ணி
சிவசிவாவென்று திருநீற்றுக்காப்புமிட்டு
திக்கெங்குநோக்கித் திசையெங்கும்ஆதரித்து
தும்பைமலர்போட்டு சூரியனைப்பூசைபண்ணி
ஐயனேமெய்யனே ஆயிரங்கண் இந்திரனே
பொய்சொல்வார்க்கெல்லாம் புரங்காக்கும்புண்ணியனே
மெய்சொல்வார்க்கெல்லாம் விளக்கொளியாய்நின்றவரே
முப்பத்துமுக்கோடி முனிவரையும்பூசைபண்ணி

நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகளையுங்கைதொழுது
சுத்திவளையவந்து செவியிலொருபூச்சொருகி
இனிவாருந்தம்பிஎன்று இசைந்துநடக்கலுற்றார்
பேடைமயில்கண்ணாள் பெருந்திருவாள்நாயகியும்
தோகைமயில்கண்ணாள் துற்சடையாள்மங்கையரும்
கால்கைகள்சுத்திபண்ணி கனிவாயுங்கொப்பளித்து
சிவசிவாவென்று திருநீற்றுக்காப்புமிட்டு
சுத்திவளையவந்து செவிதனிலேபூச்சொருகி
ஆரணங்குபாதரெல்லாம் அரண்மனையிலுட்புகுந்து
பட்டாடைதான்களைந்து பாவாடைதான்உடுத்தி
சரிகைப்பாவாடையின்மேல் சால்வைகள்மேல்போர்த்து
தாதியரைத்தானழைத்து தண்டிகைகள்கொண்டுவாடி
தண்டிகையைத்தானெடுத்து தாதியர்கள்கொண்டுவந்தா[ர்
அவ்வீதிதாண்டி வாரார்கள்வீதியிலே
தேரோடும்வீதி தெருவும்பலதாண்டி
சித்திரவீதி தெருவும்பலதாண்டி
செம்பவளவீதியெல்லாம் தாண்டியந்தத்தையலர்கள்
கடையுங்கடைத்தெருவும் கருமாரவீதிவிட்டு
போதேவருந்தடங்கண் பொன்னுருவிமாளிசென்றார்

பொன்னுருவி மாளிகைக்கு கர்ணர்முதலாக
அனைவோரும் விருந்துண்ணவந்தது.

மாளிகைக்குள்ளாக மன்னவர்கள்வந்தார்கள்
போதேவருந்தடங்கண் பொன்னுருவிதான்பார்த்து
வந்ததொருமன்னருக்கு வண்ணத்தடுக்குமிட்டாள்
சிம்மாதனங்களிட்டு வெண்போல் துயில்மடித்தாள்
இட்டதொரு ஆசனத்திலேறியவர்வீற்றிருந்தார்
இருவாந்தமாதருக்கு இட்டாளேபொன்தடுக்கு
இட்டதொரு ஆசனத்தில் மாதர்களும்வீற்றிருந்தார்
தேசத்தையாளுந் துரியோதனன்முன்னேவந்து

பொன்னுருவி துரியோதனன் பெருந்திருவாள்
அவர்களைவணங்கி அவர்களால்
ஆசீர்வதித்தலைப்பெற்றது.

மாதுஇளங்கொடியாள் மாமாவைத்தெண்டனிட்டாள்
தேசத்தையாளுந் துரியோதனன்பார்த்து

வந்துபணிந்தவளை கண்டுமனமகிழ்ந்து
வாழ்வீர்வளர்ந்திருப்பீர் வைத்திருப்பீருய்ந்திருப்பீர்
நிற்பீர் நிலைதரிப்பீர் நீடூழிவாழ்ந்திடுவீர்
பெற்றிடுவீர்பெற்றிடுவீர் பிள்ளைபதினாறும்
அத்திபுரத்துக்கு அரசாள ஆண்பெறுவீர்
அங்கனுடநாடாள ஆண்பிள்ளைபெற்றிடுவீர்
காசிவளநாடாளக் காளைகளைப்பெற்றிடுவீர்
மலடர்கள்வாசலிலே மைந்தர்களைப்பெற்றிடுவீர்
அம்பலத்துவாசலிலே ஆண்பிள்ளைபெற்றிடுவீர்
ஆல்போல்தழைத்து அறுகுபோல்வேரூடி
மூங்கில்போல்சுற்றம் முசியாமல்வாழ்ந்திடுவீர்
கர்ணரும்நீயும் கலந்துமிகவாழ்ந்திடுவீர்
வாழ்வீர்காணென்றும் மனங்குளிரவாழ்த்தினர்
போதேவருந்தடங்கண் பொன்னுருவிநாயகியும்.
பேடைமயில்கண்ணாள் பெருந்திருவாள்முன்னேவந்து
காண்கிறேனச்சியென்று கால்மேல்முடிசாய்த்தாள்
பேடைமயில்கண்ணாள் பெருந்திருவாள்தான்பார்த்து
வந்துபணிந்தவளைக் கண்டுமனமகிழ்ந்து
வாழ்வீர்வளர்ந்திருப்பீர் வையகத்திலுய்ந்திருப்பீர்
நிற்பீர்நிலைத்திருப்பீர் நீடூழிவாழ்ந்திடுவீர்
கல்புதைத்ததூண்போல் கலங்காமல்வாழ்ந்திடுவீர்
வில்புதைத்ததூண்போல் விளங்கவேவாழ்ந்திடுவீர்
வாழ்வீர்காணென்று மனங்குளிர்ந்துவாழ்த்தினள்
வாரியெடுத்து மடிமேலேகொண்டணைத்து
பிள்ளைபெறும்நாளையிலே போதீவுறவானீரோ
மைந்தன்பெறும்நாளையிலே வணங்கியுறவானீரோ
(என்று) பரியாசமாகவே பேசியவளிருந்தாள்
தோகைமயிலனையாள் துற்சடையுமேதுசொல்வாள்
போதேவருந்தடங்கண் பொன்னுருவிநாயகமே
காஞ்சிநாடாளுங் கர்ணரவரோடிவந்து
(நீ) கலந்துஉறவாடி களங்கமற்றுவாழ்ந்தீரோ
கூடிவிளையாடி குணமுடனேவாழ்ந்தீரோ
எப்படிக்கியானாலும் இருவர்மனமுமொத்து
கலந்திருந்தால்போதுமடி கட்டழகிநாயகமே
இப்படியேசொல்லி இருந்தார்களெல்லவரும்

பொன்னுருவி கர்ணர் முதலானபேர்களுக்கும் அன்னம் பகிர்ந்து பரிமாறுகிறது.

போதேவருந்தடங்கண் பொன்னுருவிநாயகியாள்
ஆக்குமடப்பளியை அலகிட்டுநீர்தெளித்து
செம்மான்முகக்கால் நிறுத்திசெம்பொன்தடுக்குமிட்டாள்
புலிமுகக்கால் நிறுத்தி பொன்னுல்தடுக்குமிட்டாள்
இட்டதொருஆசனத்தில் ஏறியவர்வீற்றிருந்தார்
வாழைஇலைபோட்டு மணிச்சொம்புநீர்தெளித்தாள்
தும்பைமலர்போல போசனமும்தான்சொரிந்தாள்
சுத்திகறிகள்வைத்து புத்துருக்குநெய்வார்த்தாள்
குத்துப்பருப்புமிட்டு கூசாமல்நெய்வார்த்தாள்
பொரித்தபொறிக்கறியும் பொன்போல்சிறுபருப்பும்
கூட்டுக்கறியும் குழம்பில்வகைக்கறியும்
ஆயிரத்தெட்டு அருங்கனியும்போசனமும்
முன்னூற்றியெட்டு முதற்கறியும்போசனமும்
அத்தனையுங்கொண்டு படைத்தாளே ஆணழகி
அந்தஅடிசில் அமுதுண்டபிற்பாடு
அத்தளிகைமாற்றியொருபொற்றளிகைமுன்னேவைத்தா
காச்சியபாலும் திருத்தியமுப்பழமும் [ள்
வாழைப்பழமும் [illegible]ழையின்மாம்பழமும்
வேரின்புறத்தில் வெடித்தபலாச்சுளையும்
கொம்பில்சிறுதேனுங் கோதுபடாசர்க்கரையும்
மலையில்சிறுதேனும் வங்காளச்சர்க்கரையும்
அந்தஅடிசில் அமுதுண்டபிற்பாடு
பாலடிசில்உண்டு பன்னீரால்கையலம்பி
உடைகொண்டுவாய்துடைத்து உத்தமர்கள்வீற்றிருந்தா
போதேவருந்தடங்கண் பொன்னுருவிநாயகியாள் [ர்
வயிரக்கல்பெட்டியை வகையுடனேதான்திறந்து
வாடாயிலைச்சுருளும் வண்ணத்துவர்பாக்கும்
கோர்வைஇலைச்சுருளும் கொட்டைத்துவர்பாக்கும்
காச்சாகளிப்பாக்கும் கம்மாறுவெற்றிலையும்
ஏலம்லவங்கமும் இசைந்தகளிப்பாக்கும்
சாதிப்பெருங்கடலில் சங்குசுட்டசுண்ணாம்பும்

சுருளை சுருள்மடித்து சுண்ணாம்பைகுட்சமிட்டு
சுத்தமிட்டபொன்மடலில் உள்ளேசுருள்மடித்து
தங்கத்தாம்பாளந்தன்னில் தாம்பூலந்தானெடுத்து
அனைவருக்குமுன்பாக அவரவர்க்குத்தான்கொடுத்தாள்
தாம்பூலந்தான்தரித்து தயவாகத்தானிருந்தார்
இப்படியாக இவரிருக்கும்வேளையிலே

கர்ணர் பொன்னுருவியுடன் கூடுகிறது.

கர்ணரும்பொன்னுருவி களித்துவிளையாடி
தன்னுடையமாளிகையில் தனித்துவிளையாடி
மன்மதனும்ரதியும்போல் மகிழ்ச்சியுடன்கூடி
கந்தரும்வள்ளியும் கைகலந்தபாவனைபோல்
இருவருந்தான்சேர்ந்து இசைவாகவாழுகையில்

பொன்னுருவி புத்திரனைப்பெற்று விஸ்வகே
தென்று பெயரிடுகிறது.

பொன்னுருவிநாயகியாள் பொற்கொடியாளப்பொழுது
மாதுநல்லாள்பொன்னுருவி மைந்தருமுண்டாகி
ஓராந்தான்மாதமதில் ஒருதிங்கட்கிழமையாச்சு
இரண்டாந்தான்மாதமது இரண்டுதிங்கள்மாதமாச்சு
மூன்றாந்தான்மாதத்திலே மூலைமுகந்தான்கறுத்து
நான்காந்தான்மாதத்திலே நாயகியுமசக்கையானாள்
ஐந்தாந்தான்மாதத்திலே அடிவயிறுபெருத்திடுமாம்
ஆறாந்தான்மாதத்திலே அங்கமெல்லாந்தங்கநிறம்
ஏழாந்தான்மாதத்திலே இளங்கொடியாள்நாயகியும்
பொற்கொடியாள்நாயகிக்கு போதச்சீமந்தஞ்செய்தார்
எட்டாந்தான்மாதத்தி லிளைப்புந்தவிர்ப்பானாள்
இளைப்பும்கவிப்புமானாள் இளங்கொடியாள்நாயகியும்
ஒன்பதாமாதத்திலே உடம்பெல்லாம்நோகுதென்பாள்
பத்தாந்தான்மாதத்திலே பெற்றாளேவிஸ்வகேதை
பெற்றாளேபொன்னுருவி பேருமிட்டாளப்பொழுதே
வளர்த்தாளேபொன்னுருவி வைத்திருந்தாள்விஸ்வகே-
இப்படியாக இருக்கின்றவேளையிலே [தை

பூலோகராசாக்கள்வந்து சகலமானபேருக்கும் வாழ்த்துதல் செய்கிறது.

அப்போ-பூலோகராசாக்கள் புத்திரனைத்தான்பார்த்து
பூமாரிதான்பொழிந்தார் பூலோகராசாக்கள்
மண்டலத்துராசாக்கள் மழைமாரிதான்பொழிந்தார்
மழைமாரிதான்பொழிந்தார் மண்டலத்துராசாக்கள்
பொன்னுருவிமசக்கை புகழ்ச்சியாய்கேட்டோர்கள்
கர்ணருடதன்கதையைக் காதாரக்கேட்டவர்கள்
கலியாணமில்லாதார் கடுகமணம்பெறுவார்
புத்திரனில்லாதார் புத்திரனுண்டாவார்
இதை-வாங்கிப்படித்தவர்கள்வாழ்வுண்டாய்தானிருப்பார்
பொன்னுருவிகதைகேட்டோர்புகழ்ச்சியாய்வாழ்ந்திருப்பார்
ஆல்போல்தழைத்து அறுகுபோல்வேரோடி
மூங்கில்போல்சுற்றம் முசியாமல்வாழ்ந்திடுவார்
வாழிவாழி யென்றுசொல்லி வரமளித்தார்ஈஸ்வரனார்

பொன்னுருவிமசக்கை

முற்றிற்று.

பன்னீராயிரப்படி

குருபரம்பரா ப்ரபாவம்.

வெகுநாளாய்ப் பாகவதர்கள் எதிர்பார்த்திருந்த
ஆழ்வார்கள் ஆசாரியார்கள் வைபவங்களைப்
பாக்கப்பேசும்

பன்னீராயிரப்படி குருபரம்பரா ப்ரபாவம்

அதிக வடமொழிச்சொற்கள் கலவாமல் சுவைமிகுந்த தென்மொழியில் முன்பதிப்பினும் இப்பதிப்பு உயர்ந்தகிளேஸ்கடிதத்தில் முத்துப்போன்ற [illegible] 600-பக்கங்கள் கொண்டதாய் பைண்டு செய்யப்பட்டு விற்பனைக்குத் தயாராக இருக்கின்றது.

விலை ரூபா 3.

புத்தகம் கிடைக்குமிடம்:

அ. இரங்கசாமி முதலியார் அண்டு சன்ஸ்

பூமகள்விலாசம் பிரஸ்

நெ-24, தாண்டவராயப்பிள்ளைத்தெரு, சென்னை.

புஸ்தக விளம்பரம்

இதேமாதிரி பெரிய எழுத்தில் அச்சிடப்பட்ட புஸ்தகங்கள்:—

ஸ்ரீமத் கம்பராமாயண வசனம் படங்களுடன்		5	0	0
மேற்படி திக்கு 2-வால்யம்	ஷை	7	0	0
மேற்படி கிளேஸ்	ஷை	10	0	0
இராமர் அஸ்வமேதயாகம்	ஷை	2	0	0
ஆதிபர்வம்	ஷை	2	0	0
விராடபர்வம்	ஷை	1	0	0
விக்கிரமாதித்தன் கதை திக்கு	ஷை	2	0	0
மேற்படி தின்	ஷை	1	4	0
தேசிங்குராஜன் கதை	ஷை	0	8	0
நளச்சக்கிரவர்த்தி கதை	ஷை	0	10	0
மதனகாமராஜன் கதை	ஷை	0	12	0
அல்லியரசாணிமாலை	ஷை	0	12	0
அபிமன்னன் சுந்தரிமாலை	ஷை	0	12	0
கிருஷ்ணன் [illegible]து	ஷை	0	8	0
மதுரைவீரன் கதை	ஷை	0	8	0
ஏணியேற்றம்	ஷை	0	6	0
[illegible]ர் அஸ்வமேதயாகம்	ஷை	0	12	0
[illegible]விலன் கதை	ஷை	0	8	0
சித்திராபுத்திரன் கதை	ஷை	0	8	0
துரோபதை குறம்	ஷை	0	6	0
பஞ்சபாண்டவர் வனவாசம்	ஷை	1	0	0
கருடபுராண வசனம்	ஷை	0	8	0
மயில்ராவணன் கதை	ஷை	0	8	0
ஆரவல்லி கதை	ஷை	0	6	0
அருணகிரியந்தாதி மூலமும் உரையும்		0	4	0
கதிரேசன் ஆனந்தக்களிப்பு		0	6	0
அறுபத்துநான்கு படங்களடங்கிய சிவபராக்கிரமம்		2	0	0
பதினெண்சித்தர் ஞானக்கோர்வை		1	4	0

எமது விலாசம்:—

அமரம்பேடு இரங்கசாமி முதலியார் & சன்ஸ்,

நெ-24, தாண்டவராயப்பிள்ளைத் தெருவு, சென்னை.